பக்கங்கள்: பன்னிரண்டு

stered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை 31 | வியாழக்கிழமை | (13-05-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 146

சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## முன்னைய அரசுவிட்ட தவறினால்
# புலிகளின் கோரிக்கையை ஏற்க வேண்டியதாகவுள்ளது

### ஜே.வி.பி. எம்.பி ரில்வின் சில்வா உரை

(நமது நிருபர்)

**முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா புரிந்துணர்வு யுத்த நிறுத்த உடன்படிக்கையின் மூலம் மேற்கொண்ட நடவடிக்கைகள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பலமடையச் செய்திருப்பதினால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு முன்னெடுக்க உத்தேசித்துள்ள சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகளை பிரதானமான தரப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.**

மகரகமவில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும் போதே ரில்வின் சில்வா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அக் கூட்டத்தில் ரில்வின்சில்வா தொடர்ந்து பேசுகையில்;

நோர்வேயின் மத்தியஸ்தத்தையும், விடுதலைப் புலிகள்தான் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை ஏற்பதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவித்து வந்தது உண்மைதான்.

இந் நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதையோ, அதன் மூலம் நாடு குட்டிச்சுவராவதையோ நாம் விரும்பவில்லை. இதன் அடிப்படையிலேயே சமாதான முயற்சியை மீண்டும் தொடர்வதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி திடசங்கற்பம் பூண்டுள்ளது.

முன்னைய ஐக்கிய தேசிய

(12ஆம் பக்கம் பார்க்க)

## தென்னங்காணிகளை ஒப்படைக்க நிதித்துறை நடவடிக்கை

(திருநெல்வேலி)

வெளிநாட்டில் உளளவர்களின் தென்னங்காணிகளை உரியவர்களிம் ஒப்படைக்க தமிழீழ நிதித்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

பளையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி இதனைத் தெரிவித்துளளார்.நிதித்துறையின் பொறுப்பிலிருக்கும் 4ஆயிரத்து 460 ஏக்கர் தென்னங்காணிகளும் உரிமையாளர்களிடம் அல்லது உரிமையாளர்களால் பரிந்துரைக்கப்படுப வர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

தென்னங்காணிகளை உரியவர்கள் பெற்றுக் கொள்வது தொடர்பாக வருவாய்துறைச் செயலகத்தில் தொடர்புகளை மேற்கொள்ளலாம். வெளிநாடுகளில் உள்ளவர்கள் அங்குள்ள விடுதலைப் புலிகளின் தொடர்பகங்களில் தொடர்பு கொள்ளலாம்.

இதேவேளை படகுகளின் வெளியிணைப்புப் பொருட்களின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இனந்தெரியாதோர் சுட்டதில் இரண்டு இளைஞர்கள் பலி

### பொலநறுவையில் சம்பவம்

(நமது நிருபர்)

பெலநறுவ மாவட்டத்தில் சுருவில் கிராமத்தில் இரண்டு தமிழ் இளைஞர்கள் இனந்தெரியாதோரால் நேற்றிரவு சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

சுட்டுக்கொல்லப்பட்டவர்களில் ஒருவர் சுருவில் கிராமத்தைச் சேர்நத கிருஷ்ணபிள்ளை பாக்கியராசா(வயது27)என்றும் மற்றவர் கொல்லப்பட்ட பாக்கியராசாவின் வீட்டில் தங்கியிருந்த மட்டக்களப்பு கிரானைச் சேர்ந்த சண்முகராசா கோகுலன்(வயது 26) என்றும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இக் கொலைச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

கிருஷ்ணபிள்ளை பாக்கியராசாவின் வீட்டுக்கு நேற்றிரவு 9 மணியளவில் சென்ற இனந்தெரியாத நபர்கள இவர்கள் மீது சரமாரியான துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்ட பின் தப்பிச் சென்றுள்ளதாகவும். இக் கொலைகளுக்கு 9.5மில்லி மீற்றர் ரகக் கைத்துப்பாக்கி பயன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் பதிலுடன்
# நோர்வே பிரதி அமைச்சர் இன்று வன்னி செல்கிறார்

(கொழும்பு)

நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீஸன் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

தேசியத் தலைவர் தெரிவித்த விடயங்களுக்கான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பதில் செய்தியை விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்காகவே அவர் அங்கு செல்லவுள்ளார்.

நோர்வே வெளிவிவகார அமைசசர் ஜோன் பீற்றர்சனும், பிரதி அமைச்சர் விடார் ஹெல்கீஸனும் நேற்று முன்தினம் கிளிநொச்சிக்குச் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்தனர்.

இதன் போது ஜனாதிபதி தெரிவித்த செய்தியை அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவரிடம் கையளித்தனர்.

அதன்படி தமிழீழ விடுதலைப் புலிகளை ஏகப்பிரதிநிதிகளாக சம அந்தஸ்துடன் பேச்சுக்கு அழைப்பதற்கு ஜனாதிபதி இணங்கியுள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். (12ஆம் பக்கம் பார்க்க)

## ஆனந்தசங்கரி மனுத்தாக்கல்

(கொழும்பு)

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சுயேட்சைக் குழு ஒன்றிற்கு தலைமை தாங்கிப் போட்டியிட்ட வீ.ஆனந்தசங்கரி உயர நீதி மன்றில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

வடபகுதியில் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது சிலர் சட்டத்திற்கு முரணான முறையில் நடந்துகொண்டதாக அந்த மனுவில குறிப்பிட்டுள்ளார்.

மனுவில் பிரதி வாதிகளாக யாழ்ப்பாண தெரிவத்தாட்சி அதிகாரி, பொலிஸ் மாஅதிபர்,இராணுவ அதிகாரி ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர். (ந-60,10)

# புலிகள் மனித உரிமைகளை மதித்துச் செயற்படுகின்றார்கள்

### மனித உரிமை ஆணைக்குழு விசாரணைப் பொறுப்பதிகாரி பாராட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகள் மனிதவுரிமைகளை மதித்துச் செயற படுகிறார்கள் என்ற உண்மையை அவர்கள் தமது அண்மைக்கால செயற்பாடுகள் மூலம் உலக அரங்கில் திறம்பட நிரூபித்துக் காட்டியுள்ளனர் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்மாவட்ட விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி பெறோஸ் தெரிவித்தார்.

நேற்று யாழ்.மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் சுயவிருப்பின் பேரில் தம்மை புலிகள் அமைப்பில் இணைத்துக்கொண்ட 9பேரை பெற்றோரிடம் ஒப்படைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிறுவர்களை தமது போராட்டத்தில் புலிகள் இணைத்துக் கொளவதாக புலிகள் மீது பல குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டு வருகின்றன. ஆனால் இவை யாவும் உண்மைக்குப் புறம்பானவை என்பதை புலிகள் தமது செயற்பாடுகள் மூலம் நிரூபித்துள்ளனர்.

அந்த வகையில் 18வயதிற்குக் குறைந்த சிறார்கள் தமது அமைப்பில் இணையும் போது அவர்களுக்குள்ள உரிமைகளை மதித்து அவர்களைப் பெற்றோர்களிடமே

(12ஆம் பக்கம் பார்க்க)

## கட்சித் தலைவர்கள் 17ஆம் திகதி சந்திப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் கட்சித் தலைவர்களின் கூட்டமொன்று எதிர்வரும் 17 ஆம் திகதி பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெறுமென்று பாராளுமன்ற செயலாளர் நாயகம் பிரியானி விஜயசேகர தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 18 ஆம் திகதி பாராளுமன்றம் கூடவுள்ளதால் அது தொடர்பாக கலந்துரையாடுவதற்கே

(12ஆம் பக்கம் பார்க்க)

# அரசுக்கு ஆதரவு வழங்க முஸ்லிம் காங்கிரஸ் நிபந்தனை

### கட்சியின் உயர் பீடம் தீர்மானம்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முனணி அரசுக்கு நிபந்தனைகளின் அடிப்படையில் ஆதரவு வழங்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

நேற்று முன்தினம் இரவு கூடிய கட்சியின் உயர் பீடம் இத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

இலஙகை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதான பேச்சுவார்த்தையில் முஸ்லிம்கள் தனித் தரப்பாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதே முஸ்லிம் காங்கிரஸின் பிரதான நிபந்தனையாகும்.

முஸ்லிம் காங்கிரஸின் இந்த நிபந்தனை குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்கள் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

பெரும்பான்மைப் பலமின்றி பெரும் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு, முஸ்லிம் காங்கிரஸின் நிபந்தனையை

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜூலைக் கலவரத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு கிடைக்கும்

(கொழும்பு)

1983ம் ஆண்டு இடம்பெற்ற ஜூலைக் கலவரத்தின் போது பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்கப்படவுள்ளது.ஜனாதிபதி சநதிரிகா குமாரதுங்கா தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே 1983ம் ஆண்டின் ஜூலைக் கலவரத்தின் போது உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கும சொத்துக்கள சேதமடைந் தோருக்கும் நட்டஈடு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

# புதிய அரசின் சமாதான முயற்சிக்கு கூட்டுக் கட்சிகளால் முட்டுக்கட்டை

## முறியடித்து முன்னேறுவது கடினம் என்கிறார் சமாதானப் பேரவையின் பணிப்பாளர் பாலகிருஷ்ணன்

(கொழும்பு)

**சமாதானப் பேச்சுவார்த்தையை மற்றவர்களின் விருப்பத்திற்கு ஏற்றவாறு ஆரம்பிக்கமுடியாது. ஏனெனில் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் போது எவ்வளவோ சவால்களை சம்பந்தப்பட்டவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும்.**

**புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு, சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றது. அதற்கான முயற்சிகளிலும் தற்போது ஈடுபட்டு வருகின்றது.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் சமாதானப் பேரவையின் பணிப்பாளர் எஸ். பாலகிருஷ்ணன்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டு வரும் "விடியும் வேளை" நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் இது பற்றிக் கருத்து வெளியிடுகையில்,

சமாதானப் பேச்சுவார்த்தையை எங்கு ஆரம்பிப்பது? எப்போது ஆரம்பிபபது? எந்த விடயத்தை முன்வைத்துப் பேசுவது? அதாவது விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசுவதா? அதிகாரப் பரவலாக்கல் குறித்துப் பேசுவதா? என்பதில் தற்போதைய அரசு நிதானமான முடிவெதுவும் எடுக்காமல் தடுமாறிக்கொண்டிருக்கினறது.

### புலிகளின் உறுதி

தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த விடயத்தில் மிக அவதானமாக உறுதியாக இருக்கிறார்கள்.

இடைக்கால நிர்வாகம் பற்றிதான் பேச வேண்டும். நோர்வேயில் தான் பேச்சுவார்த்தை நடக்க வேண்டும் என்கிறார்கள்.

எது எவ்வாறாயினும் இந்த இரு தரப்பினரின் கோரிக்கைப்படி சமாதானப்பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கமுடியாது.

இதனால் தான், நோர்வேத் தூதுக குழுவினர் அரசிடமும், புலிகளிடமும் மாறி மாறி அலைந்து திரிகின்றார்கள். அவர்களின் தெளிவான நிலைப்பாடடைப் பெற்று அதுபற்றி நிதானமாகப் பரிசீலித்து வருகின்றார்கள்.

1957ஆம் ஆண்டில் இருந்தே சமாதான நடைமுறைகள் ஆரம்பிக்கப்பட்டு 1995ஆம் ஆண்டு முறிவடைந்து பின்னர் 2002ஆம் ஆண்டு மீண்டும் அவை ஆரம்பிக்கப்பட்டு இடையில் மீண்டும் கைவிடப்பட்டு தற்போது திரும்பவும சமாதான நடைமுறைகளை ஆரம்பிப்பதற்கான முயற்சியில் சிங்கள ஆட்சியாளர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

### தோல்விக்கான காரணம்

சிங்கள ஆட்சியாளர்களால் இவ்வாறு பல ஆண்டுகளாக சமாதானத்தை நிலைநாட்ட எடுத்த முயற்சிகள் யாவும் தோல்வியடைந்தமைக்கு முக்கிய காரணம் சமாதான நடைமுறைகளை ஆரமபித்தவர்களிடம் போதிய தெளிவு, நிதானம் என்பன இருக்கவில்லை என்பதே.

எமது நாட்டைப் பொறுத்தவரையில எமது இன்றைய நிலைக்கு முக்கிய காரணம் உரிமைப்பிரச்சினை என்பதே. சகல மக்களும் சம அந்தஸ்துடனும் சுய நிர்ணய உரிமையுடனும் வாழவேண்டும் இது தான் தற்போதுள்ள பிரச்சினை.

உலகில் உள்ள பல நாடுகளின் பிரச்சினைகளுடன் ஒப்பிடுகையில், எமது நாட்டுப் பிரச்சினை மிகச் சிறிய பிரச்சினையென்றே கூறவேண்டும்.

ஆனால், எங்களுடைய நாட்டுத் தலைவர்கள் இந்த சிறிய பிரச்சினையை பாரதுாரமாக்கிவிட்டார்கள். இதற்கு ஆட்சியில் உளள அரசுடன் கூட்டுச்சேர்ந்திருக்கும் கட்சிகள் மற்றும் எதிரணிக் கட்சிகளின் ஒத்துழைப் பின்மை, விட்டுக்கொடுக்காமை, சமாதானம்பற்றிய விளக்கமின்மை ஆகியனவும் காரணங்களாக இருந்தன.

தற்போதும் கூட அரசுக்கு இதே பிரச்சினை இருக்கின்றது. அரசுக்கு சமாதானத்தை ஆரம்பிக்கவேண்டும் என்ற விருப்பம் இருக்கின்றது.

ஆனால்,அரசுடன் கூட்டுச்சேர்ந்திருக்கும் சில கட்சிகள் அரசின நடவடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை போடமுயலுகின்றன.

### முட்டுக்கட்டை

இநத முட்டுக்கட்டைகளையெல்லாம் தாண்டி சமாதானப் பேச்சுவாாத்தையை ஆரம்பிப்பது என்பது ஒரு கஷ்டமான விடயம் தான்.

அதுமட்டுமன்றி,தமிழீழ விடுதலைப்புலிகளுடன் ஏற்கனவே முரண்பட்டுக்கொண்ட அரசாக தற்போதைய அரசு இருக்கின் றது.

போர் மூலமாக புலிகளைக் கொன்றொழிக்கவேண்டும் எனக் கூறிவந்த தலைவர்கள் தற்போது சமாதானப் பேச்சுவார்த்தைக்கு புலிகளை அழைத்திருப்பது புலிகளுக்கு பெருஞ் சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

இதனால் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும்போது சில நிபந்தனைகளை விதிக்கப் பார்ப்பார்கள். தமது நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள அரசு மறுத்தால் சமாதானப பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளாது விலகி விடுவார்கள்.

இதனால் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தை முறிவடையும் அபாயம் ஏற்படும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, மக்கள் குறிப்பாகத் தமிழ் மக்கள் தமது அவல வாழ்க்கை எனறு தான் நீங்குமோ? சமாதானம் எப்போது தான் மலருமோ? என தங்கள் மனதுக்குள் கேட்டுப் புளுங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

### சமாதானம் என்பது வெறும் மாயை

உலக நாடுகளின் கண்களுக்கெலலாம் சமாதானச்சூழல் உருவாகியுள்ளதாகவே தெரிகின்றது.

ஆனால் மக்கள் மனதில் சமாதானம் ஏற்படவில்லை, மகிழ்ச்சி ஏற்படவில்லை.

என்னைப்பொறுத்தவரையிலும் தற்போது சமாதானச் சூழல் உருவாகி விட்டதாக கூறவோ கருதவோ முடியாது.

இது ஒரு மோதல் தவிர்ப்புச் சூழ்நிலை அதாவது சமாதானமும் இல்லாத யுத்தமும் இல்லாத சூழ்நிலை தான் இங்கு உருவாகியிருக்கின்றது.

ஏனெனில், சமாதானச் சூழல் உருவாகியிருந்தால், மீண்டும் யுத்தம் ஏற்படுவதற்கான காரணங்கள் இல்லாதொழிந்திருக்கும்.

அரசிடமும் சரி புலிகளிடமும் சரி யுத்தத்தை ஏற்படுத்துவதற்கான காரணங்கள் தாராளமாக இருக்கின்றன.

சிறிய ஒரு வன்முறை தோன்றினாலும் அது மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்தி விடுமோ என இரு தரப்பினரும் அஞ்சுகின்றார்கள். அந்த அச்சத்தின் காரணமாக மீணடும் போருக்கு இருதரப்பினரும் தயாராகின்றார்கள்.

### க.கா. குழுவின் பணி

இதனால்த்தான் சர்வதேச போர் நிறுத்த கண்காணிப்பாளர்கள இங்கு பணியாற்றி வருகின்றார்கள். சிறிய வன்முறைகள் இடம் பெற்றாலும் அங்கு விரைந்து சென்று நிலைமையைச் சுமுகமாக்குகின்றார்கள்.

இதறகிடையில், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஓர் பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் தற்போது அரச படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இருக்கின்றது.

ஏனெனில், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக கொலை,கொள்ளை, ஆட்கடத்தல் போன்ற வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய கடமை இரு தரப்பினருக்கும் இருக்கின்றது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தினாலே வடக்கு-கிழக்கு மாகாணததிற்கான இடைக்கால நிர்வாக சபையை அரசு வழங்கமுடியும் என்றார்.

(உ-60,10)



இருபாலை தெற்கு ஆனந்தபுரம் கலைவாணி சனசமூக நிலையத்தின் 41 ஆம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடத்தப்பட்ட விளையாட்டு நிகழ்வுகளில், முதலில் சத்தியப்பிரமாணம் செய்யும் மாணவர்களைப் படத்தில் காணலாம்.

(படம்:-தி. உமாசங்கர்)




நல்லூர் லயன்ஸ் கழகத்தினால் அண்மையில்,யாழ். மத்திய கல்லூரியின் லியோ கழக வீதி ஒழுங்கு, பராமரிப்புக்குழுவினருக்கு வீதி ஒழுங்குக் கூம்புகள் மற்றும் வீதிப் போக்குவரத்து ஒழுங்கமைப்பாளர்களுக்கான மேல் அங்கிகள் வழங்கப்பட்டன. இதில், நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் இ.இராஜகுலேந்திரன், கல்லூரி அதிபர் க. இராஜதுரையிடம் அப்பொதிகளைக் கையளிப்பதைக் காணலாம்.

# தனங்கிளப்பு-கேரதீவு இடையில் பாதை அமைக்கும் படையினர்

## நேரில் அவதானித்த சுரேஸ் எம்.பி. தகவல்

(திருநெல்வேலி)

கடந்த திங்கட்கிழமை தனங்கிளப்புப் பகுதிக்கு விஜயம் செயத கூட்டமைப்பின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிறேமச் சந்திரன், அப்பகுதி மக்களின் குறைநிறைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

அப்போது அப்பகுதி மீனவர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் தமது தொழில்களைத் தொடர்வது தொடர்பில் உள்ள இடர்களை இவரிடம் விபரித்தனர்.

இதுபற்றி எம்மிடம் கருத்து வெளியிட்ட சுரேஸ் பிறேமச்சந்திரன் எம்.பி.,

தனங்கிளப்பு முதல் கேரதீவு வரையில் மண் அணை போட்டு வீதி அமைப்பதில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காக பொதுமக்களின் வீடுகளில் இருந்து கழற்றப்பட்ட ஜன்னல், கதவுகள் மற்றும் அனுமதியின்றி பொதுமக்கள் காணிகளில் தறிக்கப்பட்ட தென்னை மரங்கள் ஆகியன பயன்படுத்தப்படுகின்றன.

இது தவிர, இம் மண் அணை அருகில் புதிய சோதனைச்சாவடிகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. இதனால் மீனவரின் இயல்பு வாழ்வு மற்றும் விவசாய நடவடிக்கை என்பன பாதி



புறுகினறன.

இதேவேளை, படையினரின் இந்த நகர்வுகள் மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளது என்று சுட்டிக்காட்டினார்.

(உ-43)

# புனரமைப்பு

(மருதங்கேணி)

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் உள்ள 15 கல்வி வலயங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆசிரியர் மத்திய நிலையங்கள் 20 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளன.

வடக்கில் 9 நிலையங்களும் கிழக்கில் 6 நிலையங்களும் இத் திட்டதின் கீழ் புனரமைக்கப்படவுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

(உ-35)

# யூரியா உரத்தின் விலை இடத்துக்கிடம் வேறுபாடு

(கொழும்பு)

அரச ஸ்தாபனங்கள் உள்ளிட்ட ஒரு சில அமைப்புக்கள் யூரியாவை குறைந்த விலையில் விநியோகித் தாலும் ஒரு சில நிறுவனங்கள் கூடுதலான விலையி லேயே அதனை விற்பனை செய்வதாகத் தெரியவந்துள்ளது.

புதியவிலை நடைமுறைகளுக் கமைய யூரியாவை விற்பனை செய்வதில் சில சிக்கல்கள் உள்ள தென அந்நிறுவனங்கள் கூறுவதாக உரச் செயலகம் அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பொதுததிறைசேரி கவனம் செலுத்தி வருகிறது. எனவே அடுத்துவரும் சில நாட்களுக்குள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனவும் அறிவிக்கப்பட் டுள்ளது.

இம்மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும்வகையில் 50 கிலோக்கிராம் எடையுள்ள யூரியாப் பொதி ஒன்றின் விலை 200ரூபாவால் குறைக்கப் பட்டமை தெரிந்ததே. (உ-63,8)

# பிஜியில் குடியேறிய இந்தியர்க்கு 125ஆண்டின் பின் என்ன நடக்கும்?

## முன்னாள் பிரதமர் சௌத்ரி

(சுவா)

பிஜியில் இந்தியர்கள் குடியேறி 125 ஆண்டுகள் நிறைவு பெற்றதைக் கொண்டாடும் இவ்வாரத்தில், அத்தீவில் இந்தியர்களின் எதிர்காலம் பற்றி கேள்வியும் எழுந்துள்ளது.

பஜியின் பிரதமராக இருந்த ஒரே இந்தியரான மகேந்திர சௌதரி விடுத்துள்ள அறிக்கையில், பிஜியில் குடியேறி அதன் பொருளாதார முன்னேற்றத்துககாக நம்ப முடியாத அளவு கொடுமைகளை சகித்துக் கொண்ட ஆயிரக் கணக்கான இந்திய முன்னோர்களுக்கு இரங்கல் தெரிவிக்கிறேன் என்று கூறியுள்ளார்.

இந்தியர்களில் பெரும்பாலானோர் ஏழைகளாகவும் இரண்டாம் தரக் குடிமக்களாகவும் இருபபதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

1980-க்குப் பிறகு பிஜியில் இனக் கலவரங்கள் அதிகரித்து வருகின்றன.1987இல் பெருமளவு இந்தியர் இருந்த அரசும் 2000த்தில் சௌத்ரி தலைமையில் அமைந்த அரசும் கவிழ்க்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து பிஜியில் இருந்து இந்தியர்கள் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.எதிர் காலத்தில் பிஜியில் வாழும் இந்தியர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துவிடும் என்றும் பொருளாதார நிபுணர்கள் கூறிவருகிறார்கள்.

1879 மே 14 இல் இந்தியர்கள் பிஜித் தீவில் இறங்கினர். உத்தரப் பிரதேசத்தில் இருந்து சென்ற முதல் அணியில் 497 பேர் இருந்தனர். அவர்களையும் சேர்த்து 60 ஆயிரம் ஒப்பந்தத் தொழிலாளர்கள் பிஜித் தீவில் உள்ள கரும்புத் தோட்டங்களில வேலை செய்யச் சென்றனர்என்று சௌதரி அறிக்கையில தெரிவிக்கப்படுகிறது. (து)

## சூடானில் நடந்த மோதலில் 204 பொது மக்கள் பலி

(நைரோபி)

சூடானில் அரசு படைகளுக்கும் முக்கிய போராளி இயக்கமான சூடான் மக்கள் விடுதலைப் படைக்கும் கடந்த சில நாட்களாக நடைபெற்றுவரும் மோதலில் பொது மக்கள் 204 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

எத்தியோப்பிய எல்லைப் பகுதியில் கடும்சண்டை நடைபெற்றுவருகிறது என்று சூடான் மக்கள் விடுதலைப் படையின் செய்தித் தொடர்பாளர் ஜார்ஜ் காரங் கடந்த திங்கட்கிழமை கூறினார்.

மற்றொரு போர்க்குழுவான கார்டோவம் போர்நிறுத்தத்தை மீறி சண்டையில் ஈடுபட்டதாகக் கூறப்பட்டாலும் அதனுடன் நடைபெறும் அமைதிப்பேச்சில் இருந்து விலகப்போவதில்லை என்று அவர் தெரிவித்தார்.

சண்டை நடைபெற்றுவருவது உண்மைதான் என்று மனித உரிமை இயக்கங்கள் தெரிவித்தன. (து)

## சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்ட ஈராக் கைதிகளுக்கு நட்டஈடு வழங்குவது பற்றி பரிசீலனை

(நியூஜோர்க்)

பக்தாத்தில் உள்ள அபுகிரேப் சிறையில் அமெரிக்க இராணுவம கற்பழிப்பு மற்றும் கொலைக் குற்றங்களிலும் ஈடுபட்டதாக அணமையில் டைம் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஈராக்கைதிகள் மீது அமெரிக்க இராணுவம் தொடர்ந்தும் சித்திரவதை செய்வதாகவும் அந்தப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இது தொடர்பாக டைம் பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளியிட்டு வரும் புகைப்படங்களின் பிரதிகளையும் புகைப்படங்களையும் அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர்களிடம் காண்பிப்பது குறித்து, அமெரிக்க இராணுவத் தலைமையகம் பரிசீலித்து வருவதாக அமெரிக்க இராணுவ உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

அவ்வாறு அமெரிக்கப் படையினரால் சித்திரவதைக்குள்ளக்கப்பட்ட கைதிகளுக்கு நட்ட, ஈடு வழங்குவது பற்றி அமெரிக்க இராணுவத் தலைமையகம் பரிசீலித்து வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ10)



பிஜிங்கிலுள்ள வடகொரிய துாதராலயத்தின் வெளிப்புறத்தில் காவற்பணியில் ஈடுபட்டுள்ள சீனப் போர் வீரர்கள்.



தனது முகமுடி மனிதர்கள் முன் அமர்ந்தப்படி வீடியோ படப்பிடிப்புக்கு தயாராக இருக்கும் நிக்கலஸ் பேர்க்.

## குழந்தைப் பருவத்தில் தூக்கக்குறைபாடு வாலிபத்தில் போதைக்கு அடிமையாக வாய்ப்பு

(புதுடில்லி)

சிறுவயதில் இன்சோம்னியா என்னும் தூக்கக்குறைபாடு உள்ள குழந்தைகள் பிற்காலத்தல் தங்கள் வாலிபத்தில் மது, சிகரெட், போதைமருந்து போன்ற பழக்கங்களுக்கு அடிமையாகும் வாய்ப்புள்ளது

அமெரிக்காவின் மிச்சிகன் பல்கலைக்கழகம் அண்மையில் வெளியிட்டுள்ள ஆய்வு முடிவு இத் தகவலைத் தெரிவித்துள்ளது.

குழந்தைப் பருவத்தில் தூக்கக்குறைபாடு மற்றும் வாலிப வயதில் போதைப் பழக்கம் ஆகிய இரண்டையும் இணைத்து ஆய்வு நடத்தப்பட்டது. அதன்படி மூன்றிலிருந்து ஐந்து வயதுக்குள் தூங்குவதில் பிரச்சினை உள்ள குழந்தைகள் தங்கள் வயதுகளில் மது மற்றும் போதை மருந்துப பழக்கத்துக்கு அடிமையாகும வாய்ப்பு அதிமாக உள்ளது என்று தெரியவந்துள்ளது.

பருவ வயதில் தூக்கம் வராத இளைஞர்கள் போதைப் பழக்கத்தை மேற்கொள்வதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. ஆனால சிறுவயதில் தூக்கம் வராமல் குழந்தைகள் தவித்தால் பருவ வயதில்போதையை அவர்கள் நாடலாம் என்பதற்கான ஓர் எச்சரிக்கையாக அதை எடுத்துக் கொள்ளவேண்டும்.

பொதுவாகப் பார்க்கும் போது போதைப் பழக்கமுள்ள பல இளைஞர்கள் குழந்தையாக இருந்த போது தூக்கம் வராமல் தவித்தவர்கள் தான் என்று புதுடில்லி அப்பல்லோ மருத்துவ மனையின மூத்த மருத்துவர் எம்.எஸ். கன்வர் கூறுகிறார்.

இதற்கென 257 சிறுவர்களிடமஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அவர்களுள் 60 சதவீதம் சிறுவர்களிடம் போதைமருந்து மற்றும் மதுப்பழக்கம் காணப் பட்டது.அதற்குக் காரணம் அவர்களின தந்தை மது அருந்துவது தான் எனத் தெரியவநதது. இச் சிறுவர்கள் அனைவரும் குழந்தைகளாய் இருந்தபோது தூங்குவதில் பிரச்சினை இருந்ததாய் அவர்களின் தாய்மார்கள் தெரிவித்தனர்.

உடல் நலமின்மை மற்றம் புறக் காரணங்களான வெப்பநிலை அதிக சத்தம், புழுக்கம் பேன்ற தூக்கமின்மைகாரணங்களாக இருக்கலாம். முக்கியமான காரணம் பெற்றோர்களின் தவறான அணுகுமுறை அல்லது வளர்ப்புமுறை.

நன்றாகத் துங்காத குழந்தைகளிடம் எளிதில் உணர்ச்சி வசப்படுதல் மிதமிஞ்சிய செயல் தறன் போன்றதன்மைகள் காணப்படும். இது குழந்தையின் மன நிலையை வெகுவாகப்பாதிக்கும். இதனால் வாலிபவயதில் அவர்களின் மனோநிலை மாறுகின்றது.போதை வஸ்துக்களை அவர்கள் நாடுகிறார்கள்என்று கூறுகிறார் மனநலநிபுணர் டாக்டர் நாக் பால். (து)

## அமெரிக்க இராணுவத்துடன் மோதல் 13 ஷியாத் தீவிரவாதிகள் பலி

(பக்தாத்)

ஷியா தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்த 13பேரை அமெரிக்கப் படைகள் கடந்த திங்கட்கிழமை சுட்டுக்கொன்றன.

அமெரிக்கத் தலைமையிலான கூட்டணிப் படைகளின் மூத்த அதிகாரி ஒருவர் நேற்றுமுன்னதினம் இத்தகவலை வெளியிட்டார்.

ஷியாப் பிரிவு முஸ்லிம்கள் அதிகம் வாழும் கு∴பா நகரில் அமெரிக்க இராணுவத்துக்கும் ஷியா பிரிவு தலைவர் சதார் மேதியின் தலைமையில் செயற்படும் தீவிரவாதிகளுக்கும் சண்டை நடைபெற்றதாக அவர் கூறினார். இதில் 14 தீவிரவாதிகள் காயமடைந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதே பிரிவைச் சேர்ந்த தீவிரவாதிகளுக்கும் அமெரிக்க இராணுவத்திற்கும் அண்மையில் நடை பெற்ற மோதலில் 4 ஈராக்கியர்கள் கொல்லப்பட்டதாகவும் 14 குழந்தைகள் உட்பட 12 பேர் காயமடைந்த தாகவும் நேரில் பார்த்தவர்கள் கூறினார்கள்.அமெரிக்காவை எதிர்க்கும ஷியா தலைவர் சதார் மேதி நிறைய ஆயுதங்களை கு∴பா மற்றும் நஜ∴ப் நகரங்களில் உள்ள மசூதிகளில் குவித்து வைத்திருப்பதாகவும் ஆட்களைத் திரட்டியுள்ளதாகவும் கூறப்படுகிறது. (து)

## WORLD NEWS உலக தரிசனம்

## வானொலி நிலையங்கள் வைத்திருப்பதில் உலகில் 2 வது இடம் சீனாவுக்கே

(பெய்ஜிங்)

உலகிலே அதிக வானொலி நிலையங்கள் உள்ள நாடுகளின் வரிசையில் 2வது இடத்தை சீனா பெற்றுள்ளது.

இத் தகவலை நீல்சன் ஊடக ஆய்வு நிறுவனம் தெரிவித்துள ளது.சீன வானொலிக்கு 1000 ஒலிபரப்பு நிலையங்கள் உள்ளன.34கோடி குடும்பங்களைச் சேர்ந்த 130 கோடி மக்கள் இவ் வானொலியைக் கேட்டு மகிழ்கிறார்கள்.15 வயதுக்கு மேற்பட்ட சீன மக்களில் பாதிக்கும் மேல் வானொலி நேயர்கள் தான்.

பெய்ஜிங்கில் 50 சதவீத மக்கள் வாரத்திற்கு சராசரியாக 14.5மணிநேரமும் சாங்காயில் 93 சதவீத மக்கள் 14 மணி நேரமும் வானொலி கேட்கிறார்கள்.வானொலிச் செய்திகள் தான் இவ்விரு நகரங்களிலும் மிகவும் பிரசித்தமான நிகழ்ச்சி.

சீனாவில் இன்டர்நெற் மற்றும் டி.வி.யின் பாதிப்பு இருந்த போதிலும் விளம்பரம் மற்றும் தகவல் ஒலிபரப்பில் வானொலி முக்கிய ஊடகமாக இருந்து வருகிறது. (து)

## 400 ஆண்டு கால கன்னி மரியாள் சிலை மீட்பு

(பராகுவே)

பராகுவேயில் 400 ஆண்டு கால பழமை வாய்ந்த கன்னி மரியாள் சிலையை பொலிஸார் மீட்டனர்.

யாகுரான் நகருக்கருகே சான்பியூனாவென்டுரா தேவாலயத்திலிருந்து அண்மையில் இச் சிலை மாயமானது. ஆனால் சஜோனியா மாவட்டத்தில் இருப்பது கடந்த சனிக்கிழமை தெரிவந்தது.

இதுதொடர்பாக சந்தேகத்தின் அடிப்படையில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (து)

# ஆந்திர மாநில சட்டப்பேரவை தேர்தலில் காங்கிரஸ் கூட்டணிக்கு மகத்தான வெற்றி

ஆந்திரப் பிரதேசச் சட்ட பேரவைத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இடங்களைக் காங்கிரஸ் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் கைப்பற்றியுள்ளன.

மொத்த 294 தொகுதிகளுக்கு மான முடிவுகள் அறிவிக்கப்பட்டு விட்டன. காங்கிரஸ் தலைமையி லான கூட்டணி 226 இடங்களிலும் தெலுங்கு தேசம் கூட்டணி 49 இடங் களிலும் வெற்றி பெற்றுள்ளன.

காங்கிரஸ் கட்சி மட்டும் 185 இடங்களைக் கைப்பற்றி அறுதிப் பெரும்பான்மை பெற்றுள்ளது.

அதன் கூட்டணிக் கட்சிகளான தெலுங்கானா ராஷ்ட்ரிய சமிதி 26 இடங்களையும் மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி 9 இடங்களை யும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 6 இடங்களையும் கைப்பற்றியுள்ளன.

தெலுங்கு தேசம் கட்சி 47 இடங்களில் மட்டுமே வெற்றி பெற் றுள்ளது. அதன் கூட்டணிக்கட்சி யான பாரதிய ஜனதா 2 இடங்க ளில் வெற்றிபெற்றுள்ளது.

சுயேச்சைகள் 17 இடங்களி லும் மற்றைய கட்சிகள் 8 இடங் களிலும் வெற்றிபெற்றன.

ஆந்திரப் பிரதேச முதலமைச் சர் சந்திரபாபு நாயுடு குப்பம் தொகு தியில் 59 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

ஆந்திரப் பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சீனிவாஸ் 60 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத் திலும், முதலமைச்சராகத் தேர்ந் தெடுக்கப்படுவார் எனக் கருதப் படும் காங்கிரஸ் வேட்பாளர் ராஜ சேகரரெட்டி 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியா சத்திலும் வெற்றிபெற்றனர்.

நகரி தொகுதியில் தெலுங்கு தேசம் சார்பில் போட்டியிட்ட நடிகை ரோஜா காங்கிரஸ் வேட் பாளரிடம் தோற்றுப் போனார்.

தெலுங்கு தேசம் அமைச்ச ரவையில் இடம் பெற்றிருந்த பல அமைச்சர்களும் தோல்வியடைந் தார்கள்.

சட்டமன்றத் தேர்தலில் தெலுங்கு தேசம் கட்சி தோல்வியடைந் ததையடுத்து முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு தமது பதவியை ராஜிநாமாச் செய்தார்.

முன்னதாக செய்தியாளர்களி டம் பேசிய சந்திரபாபு நாயுடு தேர் தலில் கட்சிக்கு ஏற்பட்ட தோல் வியை ஏற்றுக் கொள்ளவதாகவும், தெலுங்கு தேசம் கட்சி சட்டப் பேரவையில் ஆக்கபூர்வமான எதிர்க்கட்சியாகச் செயற்படும் என்றும் தெரிவித்தார். தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பைப் பணிவு டன் ஏற்றுக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே ஹைதராபத்தில் செய்தியாளர்களிடம் பேசிய காங் கிரஸ் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர் எனக் கூறப்படும் ராஜ சேகர ரெட்டி, ஆந்திரப்பிர தேசத்தில் காங்கிரஸ் பெற்றுள்ள வெற்றி அமைதிப்புரட்சி என்று வர்ணித்துள்ளார்.

ஆந்திரப் பிரதேசத்தில் காங் கிரஸ் கட்சிக்குக் கிடைத்த வெற்றி கட்சித் தலைவர் சோனியா காந்தி மீது மக்கள் வைத்துள்ள நம்பிக் கையைப் பிரதிபலிப்பதாகத் தெரி வித்தார்.

தெலுங்கு தேசம் கட்சி ஆட்சி யில் சாதாரண மக்கள் பாதிக்கப் பட்டுள்ளதால், மக்கள் ஆட்சி மாற் றத்தை விரும்பியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தனித் தெலுங்கானா மாநிலக் கோரிக்கை பற்றிக் கேட்டதற்கு தெலுக்கு தேசம் கட்சியின் தவறான கொள்கைகளினாலும் பின் தங் கிய பகுதிகளின் மேம்பாட்டுக்கு நட வடிக்கை எடுக்காமல் அதனை ஒதுக்கியதாலும் தான் தனி மாநிலக் கோரிக்கை எடுக்கப்பட்டது என்றார்.

தெலுங்கானா ராஷ்ட்ரிய சமி திக் கட்சியினருடன் சேர்ந்து பிரச் சினையைத் தீர்க்கக் காங்கிரஸ் அரசு நடவடிக்கை எடுக்கும் என் றும் ராஜசேகரரெட்டி கூறினார்.

தேர்தலில் கட்சி வாக்குறுதி அளித்தபடி விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படு மென்றும், கைவினைஞர்கள், ஊர கப் பகுதிகளிலுள்ள ஏழை மக் கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கப்படுமென்றும் ராஜ சேகரரெட்டி தெரிவித்தார். (து)

## சட்ட நிபுணர்களுடன் குடியரசுத் தலைவர் ஆலோசனை

மக்களவைத் தேர்தலில் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கோ, அணிக்கோ அறுதிப் பெரும்பான்மை கிடைக் காவிடில், புதிய அரசு அமைக்க யாரை அழைப்பது என்பது குறித் துக் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் சட்ட நிபுணர்களுடன் ஆலோசிக்கத் தொடங்கியுள்ளார்.

முன்னாள் அற்றணிஜெனரல் பராசரன் குடியரசுத் தலைவரை அவரது மாளிகையில் சந்தித்துப் பேசினார்.

உச்ச நீதி மன்றத்தின் முன் னாள் தலைமை நீதிபதி ஜே.எஸ். வர்மாவும் குடியரசுத் தலைவரைச் சந்தித்துப் பேசினார். (து)



ஜம்மு – காஷ்மீரில் உதம்பூரில் கடந்த திங்கட்கிழமை நடந்த மக்களவைத் தேர்தலில் வாக்காளர் அடையாள அட்டை இருந்தும் பட்டியலில் பெயர் இல்லாததால் ஏமாற்றம் அடைந்த பெண்.

# விருதுநகரில் வன்முறைகள் வெடித்தன திரையரங்கு, வாகனங்கள் கொழுத்தப்பட்டன

(விருதுநகர்)

சாத்தூரில் கடந்த திங்கட் கிழமை நடந்த தேர்தல் தகராறைத் தொடர்ந்து விருதுநகரில் திரைய ரங்கு மீது பெற்றோல் குண்டு வீசப் பட்டது.

தி.மு.க. நகரச் செயலர் எஸ். அர்.எஸ்.ராஜாக்கனியின் வீட்டுக்கு முன் நிறுத்தப்பட்டிருந்த கார்கள் தாக்கப்பட்டன. அ.தி.மு.க. தேர் தல் அலுவலகம் மற்றும் ஒன்றியச் செயலரின் மோட்டார் சைக்கிளுக் கும் தீ வைக்கப்பட்டது.

சிவகாசி தொகுதியில் திங்கட் கிழமை தேர்தல் தகராறு காரண மாக அமைச்சர், இன்பத்தமிழனும் ம.தி.மு.க. வேட்பாளர் சிப்பிப் பாறை ரவிச்சந்திரனும் ஒருவருக் கொருவர் மோதிக்கொண்டனர்.

இன்பத்தமிழன் தன்னை துப் பாக்கியால் சுட்டார் என்று சிப்பிப் பாறை ரவிச்சந்திரனும், ம.தி.மு.க. வேட்பாளர் தன்னை அரிவாளால் வெட்டிக் கொல்ல முயன்றதாக இன்பத்தமிழனும் பொலிஸில் தனித்தனியாகப் புகார் செய்துள் ளனர்.

இந்த நிலையில் விருதுநகரில் திங்கட்கிழமை இரவு இருதரப்பின ரும் வன்செயல்களில் இறங்கினர். தி.மு.க. மாவட்டச் செயலரும் சாத்தூர் எம்.எல்.ஏயுமான ராமச் சந்திரனுக்குச் சொந்தமான திரை யரங்கு மீது சோடா போத்தல் மற் றும் பெற்றோல் குண்டுகள் வீசப் பட்டன. இதில் பெற்றோல் குண்டு பயங்கரச் சத்தத்துடன் வெடித்துத் தீப்பற்றியது. அங்கு இருந்த ஊழியர்கள் தீயை அணைத்தனர்.

இதே போன்று அவருக்குச் சொந்தமான மில்லிலும் சோடா போத்தல்கள் வீசப்பட்டன. இந்தச் சம்பவங்களைத் தொடர்ந்து விருதுநகர் நகர தி.மு.க. செயலர் எஸ்.ஆர்.எஸ்.ராஜாக்கனியின் வீட்டுக்கு முன் நிறுத்தப்பட்டிருந்த கார்கள் சேதப்படுத்தப்பட்டு, ஜீப்புக்குத் தீ வைக்கப்பட்டது.

தேர்தல் தகராறு காரணமாக விருதுநகர் சத்தியமூர்த்தி சாலை யில் உள்ள அ.தி.மு.க. தேர்தல் அலுவலகத்துக்கு செவ்வாய்க் கிழமை அதிகாலையில் தீ வைக் கப்பட்டது.

இந்த நிலையில், விருதுநகர் ஒன்றிய அ.தி.மு.க. செயலர் கலா நிதியின் வீட்டுக்கு முன் நிறுத் தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. இதே போல் பாத்திமா நகரில் நகராட்சி சுயேச்சை கவுன்ஸிலர் பவுன்ராஜ் என்பவரது வீட்டில் மர்ம கும்பல் சோடா போத்தல்களை வீசி உள்ளது.

அனைத்து புகார்களின் பேரில் பொலிஸார் வழக்குப் பதிவுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (து)

# மத்தியில் அமையும் அரசில் தி.மு.க. பங்கேற்காது என அறிவிப்பு

(சென்னை)

மத்தியில் காங்கிரஸ் தலை மையிலான அரசிலோ அல்லது மூன்றாவது முன்னணி தலைமை யில் அமையும் அரசையோ தி.மு. க. வெளியிலிருந்தே ஆதரிக்கும் என்று தி.மு.க. அமைப்புச் செயலா ளர் ரி.கே.எஸ். இளங்கோவன் கூறியிருக்கிறார்.

சென்னையில், நேற்று முன் தினம் தூர்தர்ஷனுக்கு அளித்த பேட்டியில் இதனைத் தெரிவித்த அவர் மத்தியில் அமையும் அரசில் தி.மு.க. பங்கேற்காது என்றார்.

இப்போதைய நிலையில் இது தான் கட்சித் தலைவர் கருணாநிதி யினதும் கட்சியினதும் முடிவு என்று தெரிவித்த அவர் இந்த விஷயத்தில் மாற்றம் இருப்பின் கட்சியின் பொதுக்குழுக் கூட்டத் தில் விவாதிக்கப்பட்ட பின்னர் தான் முடிவு செய்யப்படுமென்றார்.

மத்திய அரசில் அங்கம் வகித் தால் மாநில அரசின் நலன்களுக் காகப் போராட முடியாது என்ப தால் தி.மு.க. இந்த முடிவை மேற் கொண்டுள்ளது. என்றார் இளங் கோவன். (து)

# 40இடங்களிலும் வெற்றி பெறுவோம்! காங்கிரஸ் வேட்பாளர் அறைகூவல்

(சேலம்)

சேலம் மக்களவைத் தொகுதி யில் ஒரு இலட்சத்துக்கும் மேற் பட்ட வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளது என்று முன்னாள் மத்திய அமைச்சரும் காங்கிரஸ் வேட்பாளருமான கே.வீ.தங்கபாலு கூறினார்.

ஆந்திர சட்டப் பேரவைத் தேர் தலில் காங்கிரஸ் கூட்டணி பெற்ற பெரும் வெற்றி இந்தியா முழு வதும் காங்கிரஸ் பெறவுள்ள மகத் தான வெற்றிக்குத் துவக்கமாகும். தமிழகத்தில் சோனியாவும், கருணா நிதியும் சேர்ந்து அமைத்துள்ள கூட்டணி 40 இடங்களிலும் வெற்றி பெறும். சோனியாவின் தலைமை யில் மதச்சார்பற்ற நல்லரசு அமையும்.

இரு மாநிலங்களில் மட்டுமே ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சி, சோனியா தலைமைப் பொறுப்பேற்ற பிறகு 16 மாநிலங் களில் ஆட்சியைப் பிடித்துள்ளது.

இத்தேர்தலில் வன்முறை, அராஜகம் மூலம் வெற்றி காண லாம் என நினைத்த அ.தி.மு.க - பா.ஜ.க. கூட்டணிக்கு மக்கள் சரி யான பாடம் புகட்டியுள்ளனர் என்பது வியாழக்கிழமை தெரிந்துவிடும்.

ஜனநாயக முற்போக்குக் கூட் டணி வேட்பாளர்களின் வெற்றி நிச்சயம் என்பதை உணர்ந்த அ.தி.மு.க. அரசு, அமைச்சர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள் மூலம் அதிகார துஷ்பிரயோகம் செய்து, அரச ஊழியர், ஆசிரியர், ஜனநாயக முற்போக்குக் கூட்டணி ஆதரவாளர், சிறுபான்மையினர் வாக்குகளை, வாக்காளர் பட்டிய லில் இருந்து நீக்கியுள்ளனர்.

காலம் காலமாக வாக்களித்து வந்தோரின் உரிமைகள் பறிக்கப் பட்டுள்ளன. சேலம் தொகுதியில் மட்டும் ஒரு இலட்சத்துக்கும் மேற் பட்டோரின் வாக்குரிமை பறிக்கப் பட்டுள்ளது. அடையாள அட்டை இருந்தும், அரசியலுக்கு அப்பாற் பட்ட பொதுமக்களை வாக்களிக்க அனுமதிக்கவில்லை.

அ.தி.மு.கவினரின் வன்முறை யால் 20க்கும் மேற்பட்டோர் காய மடைந்து, அரச மருத்துவமனை யில் சிகிச்சை பெற்று வருகின்ற னர். பெரும்பாலான இடத்தில் பணம் கொடுத்து, வாக்குகளை விலைக்கு வாங்கவும் முயற்சி நடைபெற்றது என்றும் அவர் கூறி னார். (து)

## இந்தியச் செய்திகள்

# வாஜ்பாய் - பெர்னாண்டஸ் அவசர சந்திப்பு

தேசிய ஜனநாயகக் கூட்டணி யில் இடம் பெற்றுள்ள முக்கிய கட்சியான தெலுங்கு தேசம் கட்சி சட்டமன்றத் தேர்தலில் பெரும் தோல்வியைச் சந்தித்துள்ள நிலையில், கூட்டணியின் ஒருங் கிணைப்பாளர் ஜோர்ஜ் பெர் னாண்டஸ் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்து ஆலோசனை நடத்தி யுள்ளார்.

தேர்தலுக்குப் பிந்திய கருத் துக் கணிப்புக்கள், மத்தியில் ஆட்சியமைக்க பா.ஜ.க. தலைமை யிலான தேசிய ஜனநாயகக் கூட் டணிக்குப் பெரும்பான்மை கிடைக் காது தொங்கு நாடாளுமன்றம் தான் ஏற்படுமென்று தெரிவித்துள்ள நிலையில், இந்த விஷயம் பற்றி யும், ஆந்திரப் பிரதேச தேர்தல் முடிவு பற்றியும் இரு தலைவர் களும் விவாதித்திருக்கக் கூடும் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதமர் இல்லத்தில் மூத்த பா. ஜ.க.தலைவர்களும் ஆந்திரப் பிர தேசத் தேர்தல் முடிவுகள் குறித்து ஆலோசனை நடாத்தவுள்ளனர். து)

# மொழி பெயர்ப்பு என்பது ஒரு கலை...

மொழி பெயர்த்தல் என்ற கலை பல நூற்றாண்டு காலத்திற்கு முன்னரே தோன்றிவிட்டது எனலாம். மொழி பெயர்ப்பு என்பது "ஒரு மொழியில் சொல்லப்படும், செய்திகளை மற்றொரு மொழிக்கு மாற்றியமைக்கும் அல்லது மறறொரு மொழியில் எடுத்துச் சொல்லும் முறையே ஆகும். பொதுவாகச் சொல்லப் போனால், மொழி பெயர்ப்பு என்பது ஒரு மொழியில் உள்ள கருத்துக்களை மற்றொரு மொழியில் மாற்றும் போது மூல மொழியில் காணப்படும் பொருள், சுவை, தன்மை போன்றவை சிறிதும் மாறாமலும். பெயர்க்கப்படும் மொழியின் அமைப்பு மற்றும் தன்மைக்கேற்பவும் அமைக்கப்படும் முறையே மொழி பெயர்ப்பு எனக் கூறப்படுகிறது.

முதன் முதலில் கிரேக்க மொழியிலிருந்து இலத்தீன் மொழிக்கு ஹோமருடைய ஓடிசியை "லிவியஸ் அன்டோனிகஸ்" என்பவர் கி.மு. 250 இல் மொழி பெயர்த்தார். இவரைத் தொடர்ந்து இன்றைய கணனி உலகம் வரை மொழி பெயர்ப்பு ஒரு கலை வடிவிலே வீறு நடையுடன் பயிலப்பட்டு வந்ததைக் காணமுடிகின்றது. குறிப்பாக காட்டலஸ், சிசரோ போன்றவர்கள் கிரேக்க மொழியிலிருந்து இலத்தீனுக்குப் பல நூல்களை பெயர்த்தனர். இதன் பிறகு ரோமப் பேரசு தோன்றிய பின்னர் அதிகமான நூல்கள் லத்தீன் மொழியில் இருந்து கிரோக்க மொழிக்கு, மொழி பெயர்க்கப்பட்டன. 8ஆம், 9ஆம் நூற்றாண்டில் கிரோக்க மொழியிலிருந்து அரேபிய மொழிக்கு கல்வி வளர்ச்சி காரணமாய் பல நூறு நூல்கள் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டன. இதனால் கிரேக்க அறிஞர்களான அரிஸ்டோட்டில், கிப்போக்கிரட்டிஸ் பிளேட்டோ போன்றோருடைய படைப்புக்கள் அரேபிய மொழிக்கு மாற்றஞ் செய்யப்பட் டன. 12 ஆம் நூற்றாண்டில் "ஜெரோட் ஆப் கிராமனர்" என்பவர் மொழி பெயர்ப்புக்கலையில் ஈடுப்பட்டு மொழி பெயர்ப்புக் கலையின் முன்னோடியாகத் திகழ்ந்தார். 16 ஆம் நூற்றாண்டில் பைபிள் ஐரோப்பிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. இதன் பின்னர் பைபிள் சுவீடிஷ், டேனிஷ் போன்ற மொழிகளிலும் பெயர்க்கப்பட்டன. அவற்றைத் தொடர்ந்தும் பையிள் ஆங்கிலம், டச்சு, ஜேர்மன், பிரெஞ்சு போன்ற மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டது. 1590இல் தான் "ஜார்ஜ் சாப்மென்" என்ற ஆங்கில அறிஞர் ஹோமரின் இலக்கியங்களை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்புச் செய்தார். அதன்பின்னரே அனைத்து மொழி இலக்கியங்களும் ஆங்கில மொழியில் வல்லுனர் பலரால் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்டது எனலாம்.

வரலாற்று அடிப்படையில் மொழி பெயர்ப்புக் கொள்கைகளையும் கோட்பாட்டினை நான்கு கட்டங்களாக "ஜார்ஜ் ஸ்டீனர்" என்பவர் பிரித்துக்காட்டியுள்ளார். அவரின் பார்வையில் அவை.

1. மொழிபெயர்ப்பு தோன்றிய காலத்தில் அவற்றிக்கான கொள்கைகள் உருவாக்கப்பட்ட காலம்.

2. மொழிபெயர்ப்பிற்கான அணுகு முறையினை "வளேரி" என்பவர் விளக்கிய காலம்.

3. 1940 ஆம் ஆண்டு "எந்திர மொழி பெயர்ப்பு" என்ற தலைப்பின் கீழ் வெளிவந்த கட்டுரைக் காலம்.

4. 1960 ஆம் ஆண்டு இவையணைத்தையும் ஒருங்கிணைத்து மொழி பெயர்ப்பிற்கு புதிய பரிமாணத்தினைக் கொடுத்து தனித் துறையாக விளங்கச் செய்த காலம்.

20 ஆம் நூற்றாண்டு மொழி பெயர்ப்பின் பொற்காலம் எனக் கூறலாம். இவ் நூற்றாண்டிலேயே உலக மொழிகள் அனைத்திலிருந்து மொழி பெயர்ப்புக்கள் தோன்றின. இதன் காரணத்தினாலேயே 20ஆம் நூற்றாண்டு மொழி பெயர்ப்புக் கலையின் ஒரு பொற்காலம் எனக் கூறப்பட்டது. இந் நூற்றாண்டில் இக் கலைக்கு வித்திட்டவர் "டெயிலர்" ஆவார் இவர் 1931 இல் மொழி "பெயர்ப்பியல்" என்ற தலைப்பில் ஒரு சொற்பொழிவினை ஆற்றினார். இச் சொற் பொழிவினை மையமாக வைத்தே உலகின் பல பகுதிகளிலும். இத்துறை சிறப்பான இடத்தினை பெற்றது எனலாம். இதன் பயனாக இந்தியாவிலே புராண இதிகாசங்களை பிற மொழிக்கு மொழி பெயர்ப்பு செய்தனர். மலையாளத்திலும், கன்னடத்திலும் இருந்த இலக்கியப் படைப்புக்கள் ஆங்கிலாத்தில் மொழி பெயர்க்கப்பட்டது.

மொழி பெயர்ப்பின் வளர்ச்சிக்கு மூல காரணகர்த்தாவாக மொழி பெயர்ப்பாளர்களே காணப்படுகின்றனர். இவர்கள் சில பண்புகளையும், கொள்கைகளையும் தனதாக்கிக் கொண்டே மொழிபெயர்புக் கலையினை முன்னெடுத்துச் செல்வார்கள். உதாரணமாக மொழி பெயர்ப்புச் செய்ய முன்னர். செய்யப்பட்ட வேண்டிய பகுதிகளை முழுமையாக வாசித்தல் பல அலகுகளாகப் பிரித்தல், பின் தன்மை அளவு, சிக்கல் போன்றவற்றை அறிதல், உருபன்கள், சமணிகள் போன்றவற்றின் கவனம் என பல்வேறு விடயங்களைக் கருத்தில் கொண்டு தான் மொழி பெயர்ப்புக் கலையை முன்னெடுப்பான்.

இன்றைய அறிவியல் நாளைய சமூதாயத்தின் தொழில் துறைக்கு பயன்படுத்துவது போல இன்றைய மொழிபெயர்ப்பு நாளைய சமுதாயத்தை பயனுள்ளதாக்கவும் வளர்ச்சி மிக்கதாக்கவும் பெரிதும் பயன்படும் எனலாம். அவ்வகையின் மொழிபெயர்பின் பயன்கள் சிலவற்றினை நோக்குவோம்.

1. ஒரு சமுதாயம் மொழிக்களைப் பயன்படுத்துவதன் மூலம் பல வழிகளிலும் பயனடைகிறது. அது போலவே மொழி பெயர்ப்பை பயன்படுத்திக் கொள்வதன் மூலமும் மொழியும் அது சார்ந்த சமுதாயமும் பயனடைகின்றது.

2. மொழி பெயர்ப்பால் ஒரு மொழியில் உள்ள செய்தி பிறிதொரு மொழிக்கு செல்கின்றன. அவ்வாறு செல்வதால் சமுதாயப் பயன்பாடும் மற்றும் மொழிப் பயன்பாடும் அதிகமாகின்றன.

3. அறிவு வளர்ச்சிக்கும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும் மொழி பெயர்ப்பு பெரிதும் துணை புரிகின்றது.

மொழி பெயர்ப்பின் வகை பற்றி "மொழியியல்" நோக்கில் மொழிபெயர்ப்பியல் என்ற நூலில் " ரோமன் ஜேக்கப்ஸன்" பின்வருமாறு கூறக் காரணமாம்.

1. ஒரு மொழிக்குள்ளே செய்யப்படும் மொழி பெயர்ப்பு. **(Intralingual Translation)**

இரு மொழிக்கிடையே செய்யப்படும் மொழி பெயர்ப்பு **(Interlingual Translation)** ஒரு மொழியில் உள்ள சொற்களை அம் மொழிக்குள்ளே மாற்றுவதை ஒரு மொழிக்குள்ளே செய்யப்படும் மொழி பெயர்ப்பு எனக் கூறப்படும். உதாரணமாக "எனக்குப் பால் வேண்டும். இத்தொடரை மாற்றி, மாறு சொற்களைப்புகுத்தி அதே பொருள்பட மாற்று முடியும். அதாவது "எனக்கு பால் தேவை என்று மாற்றலாம். ஒரு மொழியில் உள்ளதை பிறிதொரு மொழிக்கு மாற்றுவது இரு மொழிக்கிடையே செய்யப்படும் மொழி பெயர்ப்பு எனப்படும் உதாரணமாக ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும், ஜேர்மனில் இருந்து ஆங்கிலத்திற்கும்... எனக் கூறலாம்.

மொழி பெயர்ப்பினை மேலும் இரு பிரிவில் அடக்கலாம்.

1. இயந்திர மொழிபெயர்ப்பு

2. அறிவியல் மொழி பெயர்ப்பு

அறிவியல் மொழி பெயர்ப்பு என்பது அறிவியல் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கு மட்டுமல்லாமல் தத்தம் மொழியில் அறிவியலை உருவாக்குவதற்கும் பயன்படுகிறது எனலாம். அறிவியல் காரணமாக மனிதகுலம் கண்டுபிடித்த ஒரு தொழில்நுட்பமே இயந்திரத் தொழில் நுட்பம் ஆகும். இவ் இயந்திரத்தொழில் நுட்பம் என்ப தும் மூன்று பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.அவை

சசிரஜனி புலேந்திரன் (B.A)
சப்ரகமுவப் பல்கலைக்கழகம்

யாவன.

1. மனித உதவியுடன் செயற்படும் இயந்திர மொழி பெயர்ப்பு.

2. கணனிப் பொறி உதவியுடன் நடைபெறும் மனிதமொழி பெயர்ப்பு.

3. கணனிப் பொறி தானாகவே மொழி பெயர்க்கும் இயந்திரமொழி பெயர்ப்பு.

தொகுத்து நோக்குவோமாயின் மொழி பெயர்ப்பு ஒரு கலையாக, அறிவியல் துறையாக, பல்துறை சார்ந்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருவதைப் பார்க்க முடிகிறது. இப் பணியில் தனிமனிதன் குழுக்கள், நிறுவனங்கள், அரசுத்துறைகள், செய்தித் தொடர்புத்துறைகள் எனப்பலரும் ஈடுபட்டு பல்வேறு நெறிமுறைகளை பின்பற்றி இக் கலையை வளர்த்து வருகின்றனர். இவர்களது பணிகள் மட்டுமல்லாது. கணனிப் பொறிகள் போன்றவையும் இத்துறையில் பயன்படுத்துப் படுகிறது. எனவேதான் மொழி பெயர்ப்பு என்பது ஒரு கலை வடிவம் என்பது தெள்ளத்தெளிவாகின்றது. □

## அற்புதத் திருப்பதிகங்கள் முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிமுதல், திருநாவுக்கரசுநாயனார் குருபூசையை முன்னிட்டு நல்லூர் சட்ட நாதஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் பூசை வழிபாட்டையும் அதனைத் தொடர்ந்து அப்பர் சுவாமிகளின் அற்புதத் திருப்பதிகம் முற்றோதலையும் நிகழ்த்தவுள்ளது.

இந் நிகழ்வு நல்லூர் ஸ்ரீ சட்ட நாதஸ்வர சுவாமி ஆலயபரிபாலன சபைத் தலைவர் த.ஏகாம்பரநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (உ)

## பிரதேச செயலக நடமாடும் சேவை

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக நடமாடும் சேவை இன்று எழுவைதீவில் இடம்பெறவுள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் ஜெ.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ள இவ் நடமாடும் பிரதேச செயலக சேவையில்,

எழுவைதீவில் நிலவுகின்ற பிரச்சினைகள், தேவைகள் தொடர்பாக மக்கள் தொடர்பு கொள்ள முடியும் எனத் தெரியவருகின்றது.

மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு, பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவு, அபிவிருத்தி, சுகாதாரம், மின்சாரம், கல்வி, நீர்விநியோகம், வீதி அபிவிருத்தி, கடற்றொழில் நடவடிக்கை, கைத்தொழில், தபால், வங்கி போன்ற துறைகள் தொடர்பான தேவைகள் பிரச்சினைகளுக்கு இதில் உடனடித் தீர்வு காணப்படவுள்ளது. (உ-75)

## விழிப்புக் குழு அமைப்பு

(கோப்பாய்)

கோப்பாய் மத்திப் பகுதியில் அதிகரித்து வரும் சமூகச் சீரழிவு நடவடிக்கைகளைத் தடை செய்யும் வகையில் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கி வலி. கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் சம்பந்தப்பட்ட கிராம சேவையாளர் ஆகியோரின் அனுசரணையுடன் அண்மையில் விழிப்புக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் கசிப்பு விற்பனை, வீடுகளில் கள் விற்பனை, இரவு நேரத் திருடர் தொல்லை, இலக்கத்தகடு இல்லாத மோட்டார் சைக்கிள்களில் மக்கள் நடமாட்டம் குறைந்த பகுதிகளில் சுற்றி வரும் திருட்டு ஆசாமிகளை கண்காணித்தல் ஆகிய நடவடிக்கைகளை இக் குழுவினர் மேற்கொள்ளவுள்ளனர். (உ-79)

# ஜனாதிபதியின் முயற்சிகளை சகலரும் ஆதரிக்க வேண்டும்

## பேரியல் அஷ்ரப் கோரிக்கை

(கொழும்பு)

நாட்டின் நலனுக்கு முக்கியத்துவம் அளித்து அரசியல் யாப்பில்



திருத்தங்களை மேற்கொள்ளும் ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு சகலரும் ஒரு மனதான ஆதரவை வழங்க வேண்டும் என வீட்மைப்பு நீர்மாணத்துறை கிழக்கு மாகாணக் கல்வி, நீர்ப்பாசனத்துறை அமைச்சர் பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் இது பற்றித் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டு மக்கள் நலன்கருதியே அரசியல் யாப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளார்.

அத்துடன், இலங்கையின் முக்கிய பிரச்சினையான இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசியல் யாப்பில் திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும் என கல்விமான்கள் மற்றும் சட்டத்தரணிகள் ஆகியோர் கூறிவருகின்றதால், ஜனாதிபதியின் இந்த முயற்சிக்கு அதாவது அரசியல்யாப்பில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு சகலரும் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் அமைச்சர் அஷ்ரப் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (உ-60,10)

# மாதிரி உழவர் சந்தையாக மருதனார்மடம் சந்தையை மாற்றுக!

## இணுவில் விவசாயிகள் மகஜர்

(இணுவில்)

உடுவில் கமநல சேவைகள் நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற விவசாயக் கூட்டத்தில் இணுவில் பகுதி விவசாயிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் தொடர்பான மகஜர் ஒன்று உடுவில் பெரும்பாக உத்தியோகத்தர் சு.சோதிநாதனிடம் கையளிக்கப்பட்டது.

கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்ட விடயங்களாவன,

★ இப்பகுதி மக்களின் கால் நடை அபிவிருத்தியை கருத்தில் கொண்டு கால் நடை அபிவிருத்திக்காக நல்லின மாடுகள், ஆடுகள், விநியோகிக்கப்படவேண்டும்.

★ நெடுங் காலமாக கேட்கப்பட்டு வரும் மண் பரிசோதனை நிலையம் உடனடியாக ஏற்படுத்தி எல்லாப் பகுதி மண்ணும் பரிசோதிக்கவேண்டும்.

★ மிதிவெடிகள் அகற்றப்பட்ட அப்பகுதியில் மூடப்பட்ட, தூர்ந்து போன கிணறுகள் திருத்தி அமைக்கப்படவேண்டும்.

★ எமது பகுதி விவசாயிகளின் பிள்ளைகளின் தொழில் விருத்திக்கு இங்கு ஒரு மின் தறி புடவையாலை ஒன்று ஏற்படுத்தித் தரவேண்டும்.

★ எரிபொருள் இயந்திர விலைகள் கூடிக்கொண்டு போவதால் தேவையானவர்களுக்கு மானிய முறையில் மின்சாரமும் மின்சார மோட்டார் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

★ மருதனார்மடம் சந்தியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தை உடனடியாக இயங்க வைக்கவேண்டும்.

★ இணுவில் பகுதி விவசாய வீதிகள் உடனடியாகப் புனரமைக்கப்படவேண்டும்.

★ மருதனார்மடம் சந்தையை மாதிரி உழவர் சந்தையாகவும், தென் பகுதியுடன் பண்டங்கள் மாற்றி விநியோகிக்கும் இடமாகவும் மாற்றி அமைத்தல் வேண்டும்.

★ விவசாயக் கூலிகள் கட்டுக் கடங்காது போவதால் அநேக நிலங்கள் கைவிடப்பட்டுள்ளன எனவே உடனடியாகக் கூலி நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மகஜரே இணுவில் கிழக்கு விவசாய சம்மேளனத் தலைவர் சி. திருக்குமாரினால் கையளிக்கப்பட்டது. (உ-122)

## நாய்க்கடிக்கு 269பேர் சிகிச்சை

கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் கடந்த இருமாதங்களில் விசர் நாய்க்கடிக்கு இலக்காகி 269 பேர் ஏ.ஆர்.வி தடுப்பூசி ஏற்றி சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் 168 பேரும் ஏப்பிரல் மாதம் 101 பேரும் விசர் நாய் கடிக்கு இலக்காகி ஏ.ஆர்.வி. தடுப்பூசி ஏற்றிச் சென்றுள்ளனர். (உ-35)

# தென்னிலங்கை நிலப் பிரதேசங்கள் வெளிநாட்டவர்களால் சுவீகரிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கையின் நிலப் பிரதேசங்கள் பலவும் வெளிநாட்டவரினால் சுவீகரிக்கப்பட்டு வருவதாகக் ஆங்கில நாளேடு ஒன்று குற்றம்சாட்டியுள்ளது.

தென்னிலங்கையின் மாத்தறை, அம்பாந்தோட்டை,காலி முதலான மாவட்டங்களிலேயே இவ்வாறு நிலச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும், இதன்மூலம், கைவிடப்பட்ட தரிசு நிலங்களும், நிலப்பங்கீடு தொடர்பான குடும்பத் தகராறுகளால் விற்கப்படாமல் இருக்கும் நிலங்களும் உள்நாட்டுத் தரகர்கள் மூலமாக வெளிநாட்டு நிறுவனங்களிற்கு விற்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை கடுவல என்னும் பிரதேசத்தில் மாவல, உனக்குரன, கொயம்புக்க, பள்ளிக்குடாவ, துடுவா, கொடலவெல முதலான இடங் களில் பெரும் நிலப்பகுதிகள் ஐரோப்பிய பெண் தரகர் ஒருவரால் ஏற்கனவே விலைக்கு வாங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலச் சுவீகரிப் புத் தொடர்பாக அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் சில அதிர்ச்சிகரமான தகவல்களும் வெளியாகியுள்ளன. இதன்படி, ஒரு பேர்ச் நிலத்துண்டை 600 ரூபா வீதம் விலைக்கு வாங்கிய உள்நாட்டுத் தரகர் ஒருவர், அதே நிலத்துண்டை பேர்ச் ஒன்று 28 ஆயிரம் ரூபா வீதம் வெளிநாட்டுத் தரகர்களிற்கு விற்பனை செய்ததாகவும் அறியப்பட்டுள்ளது.

இவ்வாறு உள்நாட்டுத் தரகர்கள் மூலம் விலைக்கு வாங்கப்படும் நிலங்கள் இலங்கையில் உள்ள வெளிநாட்டு நிலத் தரகர்களினால் இணையதளங்கள் மூலம் விளம்பரப்படுத்தப்படுவதாகவும், இதன் மூலமே தென்பகுதியின் நிலப் பிரதேசங்கள் வெளிநாட்டு நிறுவனங்களால் அதிகளவில் கொள்வனவு செய்யப்பட்டு வருவதாகவும் அறியப்பட்டுள்ளது. (உ)

# புலிகளின் நிலைப்பாட்டிற்கு

# ம.ம.முன்னணி வரவேற்பு

(தலவாக்கலை)

இடைக்கால நிர்வாகசபை வடகிழக்குப் பிரதேசத்தில் ஏறபடுத்தப்பட்ட பின்னரே பேச்சுவார்த்தைகள் தொடர்வதற்கான



வாசல் திறக்கப்படுமென புலிகள் தெரிவித்திருப்பதை மலையக மக்கள் முன்னணி வரவேற்றுள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் இதுகுறித்து வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

இருவருடங்களுக்கு முன்னால் சமாதானப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் மக்கள் விடுதலை முன்னணியும், பொதுஜன் ஐக்கிய முன்னணியும் முழு நகர்வுகளையுமே கடுமையாகவே விமர்சித்து வந்துள்ளன.

புதிய அரசு அமைக்கப்பட்ட பின்னரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கமாக இருக்கின்ற மக்கள் விடுதலை முன்னணி சமாதானப் பேச்சுவார்த்தையை விமர்சிக்கும் விதத்தில் தொடர்ச்சியாக புதுப்புது அறிக்கைகளை விட்டுக் கொண்டிருக்கிறது.

தற்போதும் கூட உலக நாடுகளின் ஆதரவையும், பொருளாதார உதவிகளையும் பெறவேண்டும் என்பதற்காகவே வாசகங்களை மாற்றி மாற்றிப் பேசி தங்களின் அரசியல் குழப்பத்தை இவர்கள் வெளிப்படுத்தி வருகிறார்கள்.

இந்த நிலையில் இடைக் கால நிர்வாகசபை என்பது ஏற்கனவே உடன்பாடு காணப்பட்ட விடயம் ஆகும். தற்போது அதிலிருந்துதான் பேச்சுவார்த்தை ஆரம்பமாக வேண்டுமென புலிகள் தெரிவித்துள்ள கருத்து உறுதியானதும், நியாயமானதும், ஏற்புடையதுமாகும்.

ஆளும் கட்சியின் ஒத்த கருத்துக்கள் ஏற்படவில்லை என்றால் கூட்டுச் சேர்ந்தவர்களின் வேடம் அம்பலமாகும்.

வெளிநாட்டு அமைச்சர் புலிகளை "தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக" ஏற்றுக் கொண்டிருப பதுகூட உதவி வழங்கும் நாடுகளுக்குப் போடப்படுகின்ற தூண்டிலாகவே இருக்குமோ என மலையக மக்கள் முன்னணி சந்தேகிக்கிறது.

இந்நிலையில் விலை மதிக்க முடியாத தியாகங்கள், பல்லாயிரக்கணக்கான உயிர்ப் பலிகள், அர்ப்பணங்களுக்குப் பினனால் மீண்டும் தொடரவிருக்கும் பேச்சுவார்த்தையில் துளியளவும் விட்டுக்கொடுப்பிறகு இடமில்லாமல் புலிகள் நடந்து கொள்ள வேண்டுமென மலையக மக்கள் முன்னணி எதிர்பார்க்கிறது என்று குறிப்பிட்டுள்ளது. (உ)

## இருநாள் முழுநேர மின்வெட்டு

(சில்லாலை)

கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் சித்தங்கேணி, பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய், மாதகல், வட்டுக்கோட்டை பகுதிகளில் எங்கும் முழுநேர மின்வெட்டு அமுல்படுத்தியதையடுத்து பல்வேறு பணிகளும் ஸ்தம்பிதம் அடைந்து காணப்பட்டன.

இதுபற்றி சித்தங்கேணி மின்சார சபையுடன் தொடர்பு கொண்டபோது, இதற்கு சட்ட விரோத மின்பாவனையே காரணம் எனத் தெரிவிக்கப் பட்டது. மூன்று நாட்களாகப் பெய்து வரும் மழை காரணமாகவும், சட்ட விரோத மின்பாவனை காரணமாகவும் சீராக மின் விநி யோகம் மேற்கொள்ளமுடியா துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-58)

## மீனவர்கள் வீடுகளைஅமைக்க 7 இலட்சம் நிதி

(மருதங்கேணி)

முல்லை மாவட்டத்தில் வன்செயலினால் பாதிக்கப்பட்ட மீனவக குடும்பங்களுக்கு வீடுகள் அமைப்பதற்கு கடற்றொழில் திணைக்களத்தால் 7 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் அதிக தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால், தற்போது கிடைத்துள்ள இந்த நிதி போதாமல் இருப்பதாகவும் இந்நிதியைக் கொண்டு கூடுதலான இழப்புள்ளவர்களுக்கே வீடுகளை கட்டிக்கொடுக்க முடியுமெனவும் முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

(உ-35)

## திலீபன் மருத்துவமனைகளில் 13,221 பேருக்கு ஏப்ரலில் சிகிச்சை

(மருதங்கேணி)

தியாக தீபம் தீலிபன் மருத்துவ சேவையினால் நடாத்தப்பட்டு வரும் 10 நிலையங்களிலும் மொத்தம் 13 ஆயிரத்து 221 பேர் கடந்த ஏப்ரல் மாதம் சிகிச்சை பெற்றுள்ளனர்.

திலீபன் மருத்துவ நிலையங்களான மாங்குளத்தில் ஆயிரத்து 153 பேரும், புளியங்குளத்தில் ஆயிரத்து 509 பேரும், பூநகரியில் ஆயிரத்து 963 பேரும், புங்குடுதீவில் ஆயிரத்து 703 பேரும், கற்சிலை மடுவில் 2 ஆயிரத்து 571 பேரும், ஆழியவளையில் ஆயிரத்து 469 பேரும், அளம்பிலில் 856 பேரும், ஐயன்குளத்தில் 684 பேரும், நயினாமடுவில் 457 பேரும், அடம்பனில் 856 பேரும் என மொத்தமாக 13 ஆயிரத்து 221 பேருக்கு இவ்மருத்துவ மனையில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

(உ-35)

## மண் அகழப்பட்ட குழிகளால் மாரி காலத்தில் பேராபத்து

### மண்கும்பான் மக்கள் மனக்கவலை

(மண்கும்பான்)

மண்கும்பானில் தொடர்ந்தும் இடம்பெற்றுவந்த மண் அகழ்வு பொலிஸாரினதும், நீர் வழங்கல் அதிகார சபையினதும் தலையீட்டினால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

சுமார் 6 மாத காலமாக தொடர்ந்த இம் மண் அகழ்வானது தற்பொழுது தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மண் அகழப்பட்ட பெரிய குழிகள் இருப்பதால் வரும் மழை காலங்களில் அப்பகுதிகளில் மழை நீர் தேங்கி நிற்க வாய்ப்புள்ளது.

இதனால், எதிர்காலத்தில் ஆபத்துக்கள் நேரக்கூடும் எனவும், குறிப்பாக சிறுவர்கள் விளையாடும்போது இவ்வா றான இடங்களில் தவறிவிழ வாய்ப்புள்ளதாகவும் இப்பகுதி மக்கள் கவலை தெரிவித்திருக்கின்றனர்.

இப்பள்ளங்களை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தையும இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.(உ-56)

## வடகிழக்கு கிராம அலுவலர் சங்கத்திற்கு நிரந்தரக் கட்டடம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு கிராம அலுவலர் சங்கத்தின் கட்டடம் அண்மையில் வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் அதன் தலைவர் ப.வசந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதி ராசா, வவுனியா மாவட்ட அரச அதிபர் கணேஷ் மற்றும் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிசோர், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோகராதலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்டப் பிரதிநிதி க.பரஞ்சோதியால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் வவுனியா அரச அதிபர் இச்சங்கத்திற்கு காணி ஒதுங்குவதற்கும், பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்டடம் அமைப்பதற்கு நிதி வழங்குவதற்கும் சம்மதம் தெரிவித்துள்ளனர். (உ)

## பிரதி பாதுகாப்பு அமைச்சராக முன்னாள் பிரதமர் நியமனம்

(கொழும்பு)

பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவும், பௌத்த சாசன அமைச்சராகவும் இரட்ணசிறி விக்கிரமநாயக்க விரைவில் பதவியேற்கவுள்ளார்.

ஜனாதிபதியின் முன்னிலையில் இவ்வமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பதற்கான சத்தியப் பிரமாணத்தை அவர் விரைவில் மேற்கொள்ளவுள்ளார்.

இவர் ஜனாதிபதியின் நெருங்கிய அரசியல் சகாவாக விளங்குவதோடு, ஸ்ரீலங்காவின் பிரதமராகவும் பதவி வகித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, வர்த்தக மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சிற்கான பிரதியமைச்சராக மேர்வின் சில்வாவும் ஜனாதிபதி முன்னிலையில் பதவியேற்கவுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள இவ்விருவரது பெயர்களும் தேர்தலுக்கு முன்பாக, முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் பெயர்களுள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. தேர்தல் முடிவடைந்த பின்பே இவர்கள் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## தகவல் தொழில்நுட்ப சான்றிதழ் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

தேசிய கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான திட்டத்தின் கீழ் ஜூலை மாதம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் ஒருவருட பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி க.பொ.த. சா/த இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் 6 பாடங்களில் (கணிதம், ஆங்கிலம் பாடங்களில் திறமைச்சித்தி உட்பட) சித்தி பெற்றிருப்பதுடன் 16-25இற்கிடைப்பட்ட வயதெல்லையைக் கொண்டிருக்க வேண்டும்.

முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தே.அ.அட்டை இலக்கம் ,சித்தியடைந்த பாடங்களுடன் கல்வித் தகமை ஆகியவற்றை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தை மாகாண பணிப்பாளர், தேசிய பயிலுநர், கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, இல 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 15ற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.(உ)



சுகாதாரச் சீர்கேடுகளை உருவாக்கும் விதத்தில் கண்ட இடங்களில் கழிவுகள் கொட்டப்படுவது நிறுத்தப்பட வேண்டும்.

யாழ்.முற்றவெளிக்கு அருகிலுள்ள வீதியோரமாக கழிவுகள் கொட்டப்பட்டிருப்பதைப் படத்தில் காணலாம்.

(படம்: க.பவன்)

# ஈழத்திற்குப் புகழ் ஈட்டித்தந்த தவில் மேதை

# அமரர் வி.தெட்சணாமூர்த்தி

உலகம் போற்றும் உயர்ந்தவர்கள் உன்னதமானவர்கள் வரிசையிலே ஈழத்திற்குப் பெருமை தேடித்தந்தவர்களில் உலக தவில் மேதை அமரர் வி.தெட்சணாமூர்த்தி முதன்மையானவர் என்றால் அது மிகையாகாது. ''மேதை'' என்று எள்ளளவும் தயக்கமின்றிப் போற்றக்கூடிய மாபெரும் தவில் மேதை தெட்சணாமூர்த்தி அவர்கள்.

ஈழத்தில் மட்டுமல்ல உலகளாவிய ரீதியிலே தவில் வித்துவத்தைப் பரப்பி நின்றவர். கலைகளைப் பொறுத்த வரையில் பாரதத்திற்கு ஈழம் சளைத்தல்ல என்ற வரலாற்று முத்திரையைப் பதித்து வைத்தவர் தெட்சணாமூர்த்தி அவர்கள். அவரது காலத்திற்கு முன்போ அல்லது சமகாலத்திலோ அல்லது அவரது காலத்திற்கு பின்போ ஏன் இனிமேலாவது அப்படியொரு தவில் மேதையைக் காணமுடியாது. அன்றி காண முடியுமெனின் தெட்சணாமூர்த்தி தான் மறு அவதாரம் எடுக்க வேண்டும்.

### வாழ்க்கை வரலாறு

இணுவிலைச் சேர்ந்த அமரர்கள் திரு. திருமதி விஸ்வலிங்கம் இரத்தினம் தம்பதிகளுக்கு 26.08.1933 இல் மகனாகப் பிறந்தவர் தெட்சணாமூர்த்தி அவர்கள். இவரது பெற்றோர் இவரை ஒரு பெரிய தவில் வித்துவான் ஆக்க வேண்டும் எனக்கொண்டிருந்த ஆர்வத்தால் சிறுவயதிலேயே அப்போது பிரபல தவில் விற்பன்னர்களாக விளங்கிய அமரர்கள் என்.சின்னத்தம்பி, பி.எல். இராஜகோபால், காமாட்சி சுந்தரம்பிள்ளை ஆகியோரிடம் தவில் கலையைப் பயிற்றுவித்தனர். தனது எட்டாவது வயதிலேயே மேடைகளில் வாசிக்கத் தொடங்கிய இவர் பின்னர் உலகத் தவில் மேடைகளைத் தனதாக்கிக் கொண்ட உலக தவில் மேதையானார். இந்தியப் பிரபல தவில் விற்பன்னர்களிடமும் இவரைப் பயில வைக்கவேண்டுமென்ற பெற்றோரின் விருப்பத்தால் தவில் மேதை அமரர் நாச்சியார் கோவிலடி ராகவப் பிள்ளையிடம் குருகுலவாசம் செய்து தவில் பயில வைத்தனர். பின்பு தனது பெரும் முயற்சியாலும் இறைவனது அருட்கொடையாலும் தனக்கென ஒரு தன்மை வகுத்து தவில் கலையில் ஒரு பெரு விற்பன்னர் ஆனார்.

### மங்காப் புகழ் பெற்றவர்

பாரதத்தைச் சேர்ந்த காலம் சென்றவர்களான நாதஸ்வரச் சக்கரவர்த்தி திருவாடுதுறை ரி.என்.இராஜரத்தினம்பிள்ளை, நாதஸ்வர விற்பன்னர் காரைக்குறிச்சி அருணாச்சலம், திருவாணைக்கா ஷேக்கின்ன மௌலானா சாஹிப் போன்ற பெரும் மேதைகளுக்கு மிக அற்புதமாக தவில் வாசித்து சிறந்த பாராட்டைப் பெற்றவர். அவர்களிற்கு வாசித்த அற்புதமான வாசிப்பால் என்றும் மங்காத புகழ் அடைந்தார். இந்தியாவிலே இசை விழா உட்பட பல நிகழ்ச்சிகளிலும் தவில் கச்சேரி என்பது (தவில் சமர்) ஒரு இடைவேளை நிகழ்ச்சியாகவே கணிக்கப்பெற்று வந்தது. ஆனால், அதைத் தனது தவில் வாசிக்கும் தனித்திறனாலும், கவர்ச்சியாலும் நாதஸ்வர தவில் கச்சேரியின் முக்கிய அம்சமாக ரசிகர்கள் இருந்து கேட்டு ரசிக்கும் அளவுக்கு மாற்றி அமைத்த பெருமை தெட்சணாமூர்த்தி அவர்களையே சாரும்.

இந்திய சபையொன்றிலே பொதுவாக ஐந்து நாட்களிலும் கடினமான சங்கீர்ண



**உலகத் தவில் மேதை வி.தெட்சணாமூர்த்தியின் 29ஆம் ஆண்டு நினைவு தினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**

நடையைப் பின்பற்றி இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேலாக லயவின்னியாசம் செய்துள்ளார். எந்தவிதமான தாளம், ஜாதி, நடை என்றாலும் எல்லாமே கைவரப் பெற்றவராக எல்லாவகையும் சர்வசமனானது போன்று மிகத் தேர்ச்சி பெற்று விளங்கினார். வித்தியாசமான தாளங்களில் வித்தியாசமான இடங்களில் மிக அபாரமாக மணித்தியாலக் கணக்காக வாசிக்கும திறமை கொண்டவர்.

நாதஸ்வர வித்துவான் அமரர் ஷேக்கின்ன மௌலானா சாஹிப்புக்கு தெட்சணாமூர்த்தி தவில் வாசித்தமையை இந்திய பிரபல சங்கீத விமர்சகராகிய சுப்புடு அவர்கள் ''இந்தியன் எக்ஸ்பிரஸ்''என்ற இதழில் எல்லை கடந்த கலை நுணுக்கத் திறனின் உச்சம் என்று இவரைப் புகழ்ந்துள்ளார். கிருஷ்ண கானலாவில் நடைபெற்ற இந்த இசை விழாவில திருநந்திதேவரே நேரில் வந்து தவில் வாசித்தாரோ என்று எண்ணும் அளவிற்கு,ஒரு மனிதனின் கைவிரல்களில் இவ்வளவு நுண்மையான நாத பேதங்களை இசைக்க முடியும் என்று ஒரு போதும் கற்பனை கூடப் பண்ணிப் பார்த்ததில்லை என்று வர்ணித்துள்ளார்.

### லயஞான குபேர பூபதி

அந்த நாட்களிலே இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளிற்குச் சென்று பல சபைகளில் தவில் வாசித்து பெரும் புகழ் பெற்றவர்.அவர் தாய்நாடாகிய ஈழத்திற்குத் திரும்பியபோது ஈழத்தவர்கள் அவரிற்கு ''லயஞான குபேர பூபதி'' என்ற ஒப்புயர்வான பட்டத்தை வழங்கிக் கௌரவித்தனர். ஈழத்து நாதஸ்வரக் கலைஞரான அமரர் கோண்டாவில் திருநாவுக்கரசு அவரிற்குத் தவில் வாசித்து மகிழ்ச்சி அடைந்து தனது மனதிற்குப் பிடித்த நாதஸ்வரம் என்று கூறியுள்ளார்.மற்றும் அண்மையில் அமரரான கலாசூரி அளவையூர் என்.கே. பத்மநாதன் அவர்களிற்கு பலவருடங்கள் தவில் வாசித்து இரசிகர்களிற்கு விருந்து படைத்துள்ளார்.

உலகத்திலே உச்சமான நிலையில் படைக்கப்பட்டவர்கள் ஒரு யுகத்திற்கு ஒருவர் என்பதுபோல் இவரது வாழ்க்கை அமைந்து இருப்பதை நாம் பெரு இடைவெளியில் காணலாம்.

இன்றைக்கும் தெட்சணாமூர்த்தி அவர்களது கடினமான சில பிரயோகங்கள் இன்றைய உலகத் தவில் விற்பன்னர்களாலும் வாசிக்கப்பட இயலாத நிலையில் உள்ளன. உலகம் முழுவதும்,கடுகளவேனும் மாசு மறை இன்றி சகல கலைஞர்களாலும் ஏற்றுக் கொண்டவர் தான் தெட்சணாமூர்த்தி அவர்கள். அவரிடம் நேரில் கற்காதவர்கள் கூட அவருடைய தவில் வாசிக்கும் பாணியையே போதனையாகக் கற்றுக் கொள்ள முனைகிறார்கள்.சகல தவில் நாதஸ்வர மற்றும் இசைக் கலைஞர்களாலும் எந்தவித குறையும் இன்றி ஏற்றுக் கொள்ளப்பட்டமைதான் இந்த மேதையின் சிறப்பம்சம்.

அதிசயமாக வாழ்பவர்கள் இந்த அவனியில் நீண்டகாலம் வாழ்வதில்லைப் போலும். அவரது 42வது அகவையிலே 13.05.1975இல் இறைவன் தனது கலைக்கு இப்பெருங் கலைஞனை அழைத்துக் கொண்டார். பாரதத்திலே அன்னாரது

**குமரேசன் புரந்தரன்**

மறைவிற்குக் கடைகள் மூடப்பட்டு, கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன என்றால் ஈழத்தின் சோகத்தைக் கூறவும் வேண்டுமா? இவரது நினைவு மலரிலே நவாலியூர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்கள் பட்டம் பதவியை இழந்தது என்று கூறுகிறார்.

அதேபோல் தெட்சணாமூர்த்தி அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்தாலும் அவருடைய கலையம்சம் நிலையம்சமாகி நீடு வாழும் என்பது நிஜமானதே!

## இறால் வளர்ப்புப் பற்றிய இருநாள் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தினால் இறால் வளர்ப்பில் ஈடுபடுவதற்கு ஆர்வமுள்ளவர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 26,27ஆம் திகதிகளில் நடாத்தப்படவுள்ளது.

சிலாபம் அக்குவா சேவிஸ் ஸ்தாபனம், யாழ். மாவட்ட போரூட் நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ள இச்செயலமர்வின் முதல் நாள் விரிவுரைகளினதும், செயன்முறைகளினதும் பின் இறால் வளர்ப்பிற்கு ஏற்ற பொருத்தமான இடங்கள் தெரிவு செய்யப்படவுள்ளன.

இரண்டாம் நாளன்று தெரிவு செய்யப்பட்ட இடங்கள் அந்தந்த துறைசார் நிபுணர்களினால் பார்வையிடப்பட்டு, பொருத்தமான இடங்கள் தீர்மானிக்கப்பட்டு ஆலோசனை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இச்செயலமர்வில் பங்குபற்றும் வகையில் விண்ணப்பித்து, இதுவரை அனுமதிக் கடிதங்கள் கிடைக்காதவர்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு தமது பங்குபற்றுதலை உறுதிப்படுத்துமாறு கேட்கப் பட்டுள்ளது. (உ)

## கைவிடப்பட்ட காவலரணில் மரங்கள் மீட்டெடுப்பு

(தனங்கிளப்பு)

தென்மராட்சி தெற்குப் பகுதியில் மறவன்புலோ வடக்கில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த புகையிரத வீதியூடாக அமைக்கப்பட்டிருந்த இராணுவக் காவலரண்களில் இருந்து இராணுவம் வெளியேறியதை அடுத்து அங்கிருந்த முட்கம்பிகள் மரங்கள் என்பவற்றைப் பலரும் எடுத்துச் செல்கினறனர். அத்துடன், அங்குள்ள மணல்பிட்டிப் பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வு நடவடிக்கைகளும் இடம்பெற்று வருவதாகத் தெரியவருகிறது. (உ-37)

## கணனி அறிவு விருத்திக் கருத்தரங்கு

(கொழும்பு)

இலங்கையில் தமிழ் மொழி ஊடான இணைய மற்றும் கணனி அறிவை விருத்தி செய்யும் முகமாக ''உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றத்தின் இலங்கைக் கிளை முழுநாள் தமிழ் இணைய/கணனிக் கருத்தரங்கை ஒழுங்கு செய்துள்ளது.

தெஹிவளை கொன்கோட் விடுதியில் எதிர்வரும் மாதம் 6ஆம் திகதி இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் இலங்கை வல்லுநர்களுடன் தமிழ் இணையத்தில் 15 வருடங்களுக்கு மேலாக அனுபவம் வாய்ந்த மலேசியரான முத்துநெடுமாறன் கலந்து கொள்ளவுள்ளார். (உ)

## நுளம்பு வலை விநியோகம்

(மருதங்கேணி)

சர்வோதய நிறுவன நிதியுதவியுடன் சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவனமூடாக விசுவமடு பிரதேசத்தில் உள்ள 4 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் விநியோகிக்கும் நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

(உ-35)

## இன்று கொடியேற்றம்

(இணுவில்)

இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய வருடாந்த உற்சவம் இன்று வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ள இந்தத் திருவிழாவில் தேர், தீர்த்த உற்சவங்கள் முறையே எதிர்வரும் 23,24 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

(உ-122)

## வீதிகள் திருத்தம் இல்லை

(இருபாலை)

நயினாதீவின் முக்கிய பல வீதிகள் நீண்டகாலமாகத் திருத்தப்படாதுள்ளமையால், அதனூடாகப் பயணம் செய்வோர் பெரும் துன்பங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வீரபத்திரர் வீதி, முருகன் வீதி விநாயகர் வீதி ஆகிய பிரதான வீதிகளே கடந்த 20 வருடங்களுககும் மேலாக திருத்தம் செய்யபபடாது இருக்கின்றன.

இதன் காரணமாகவே பேருந்துப் பாதைகளும் மட்டுத்தப் பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

(உ-84)

## திருநாள் திருப்பலி

(சில்லாலை)

யாழ்.மறை மாவட்ட பண்டத்தரிப்பு பங்கில் அமைந்துள்ள பாத்திமா அன்னை ஆலயத்தில் இன்று திருநாள் திருப்பலி இடம்பெறவுள்ளது.

யாழ்.ஆயர் தலைமையில் காலை 6.00 மணி முதல் இந்தத் திருப்பலி ''மரியா ஆண்டவரின் அடிமை'' என்ற கருப்பொருளில் இடம்பெறவுள்ளது.

(உ-58)

## நாவுக்கரசர் படங்கள் அன்பளிப்பு

இன்று நடைபெறவுள்ள திருநாவுகச்கரசு நாயனார் சுவாமிகளின் குருபூசையை முன்னிட்டு கே.கே.எஸ் வீதியில் உள்ள மில்க்வைற் சோப் தொழிலகம் சுவாமிகளின். திருவுருவப் படத்தை இலவசமாக அன்பளிப்புச் செய்து வருகின்றது.

பாடசாலைகள்,இந்து சமய நிறுவனங்கள், மன்றங்கள், சனசமூக நிலையங்கள் யாவும் நேரில் வந்து இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## கட்புல சாதனம் வழங்கல்

(மருதங்கேணி)

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளில் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்கும் பார்வை குறைந்த மாணவர்களுக்கு கட்புல சாதனங்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

இதற்கமைய மேற்படி குறைபாடுகள் உடைய மாணவர்களின் விபரங்கள் பாடசாலை அதிபர்களினூடாக வலயக் கல்விப் பணிப்பாளர்களினால் திரட்டப்பட்டு வருகின்றன.

(உ-35)

## தேசிய கல்வியியல் கல்லூரிகளில்

# ஒழுக்கநெறி முறைகளுக்கு கட்டுப்பட்டே மாணவர்கள் நடந்துகொள்ள வேண்டும்

## யாழ்.பீடாதிபதி கமலநாதன் விளக்கம்

(யாழ்ப்பாணம்)


தேசிய கல்வியியல் கல்லூரிகளில் பயிலும் ஆசிரிய மாணவர்களுக்கு இருக்க வேண்டிய ஒழுக்க வரம்புகளுக்கு உட்பட்டுச் செயற்படுமாறு மாணவர்களை நாம் வலியுறுததும் போதும், அதனை மாணவர்கள் தப்பாகக் கருதி வீண் சர்ச்சைகளையும் விமர்சனங்களையும் உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியில் அதிகார துஷ்பிரயோகங்களும, அடிப்படை மனிதஉரிமை மீறல் சம்பவங்களும் இடம்பெற்று வருவதாக வெளிவரும் தகவல்கள் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு ஒன்று நேற்று யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியில் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கல்லூரியின் ஆலோசனைசபை உறுப்பினர்களான பேராசிரியர் அ.சண்முகதாஸ் பேராசிரியர் சபா.ஜெயராஜா மற்றும் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா, கலாநிதி கி.விசாகரூபன், வைத்திய கலாநிதி வை. தியாகராஜா, செஞ்சொற்செல்வர் ஆறு திருமுகன் ஆகியோரும் கலந்து கொண்ட இவ் ஊடகவியலாளர் மாநாட்டில் மேலும் கருத்துத் தெரிவித்த பீடாதிபதி,

### ஒழுக்க வரம்புகள்

கல்வியியற் கல்லூரி என்பது பல்கலைக்கழகம போன்ற ஓர் நிறுவனம் அலல. இங்கு பயிலும் மாணவர்கள் அடிப்படையில் இருந்தே அரசாங்க ஊழியராகத் தம்மை அரச சேவையில் இணைத்துக் கொள்வதால் இவர்களுக்கென தனித்துவமான வேலைவாய்ப்புச் சலுகைகளும் அடிப்படை ஒழுக்கக் கோவை நடைமுறைகளும் உண்டு.



இதனால், மாணவர்கள் சுயாதீனமாகச் செயற்பட முடியாது. அவர்களுககென இருக்கும் ஒழுக்க வரம்புகளுக்குட்பட்டே நடந்து கொளளமுடியும். இதற்கான உடன்படிக்கைக்குக் இணங்கி கையெழுத்திட்டே மாணவர்கள் இங்கு தம்மை இணைத்துக் கொள்கிறார்கள்.

தேசிய கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கென ஒழுங்கமைகப்பட்டுள்ள ஒழுக்க வரம்புகளுக்குட்பட்டு நடக்குமாறு நாம் மாணவர்களை வலியுறுத்துகிறோம்.

இவ்வாறான ஒழுக்கங்களைக் கடைப்பிடிக்கச்செய்து மாணவர்களைக் கையாள்வதில் நாம் பலத்த சவால்களை எதிர்கொளகிறோம். இதனால் மாணவர்களுக்கு எமமீது ஏற்படும் கோபங்கள் எம்மை விமர்சிக்கும் அளவுக்கு அவர்களைத் தூண்டிவிடுகிறது.

இவவாறு அவர்களைத் தூண்டிவிடுவதில் பல்கலைக்கழக நடைமுறைகள் பின்னணியாக இருப்பதை உணரக்கூடியதாகவுள்ளது. இத் தூண்டுதல்களால் ஏற்படும் வேண்டாத சம்பவங்கள் எம்மை பலத்த மன வேதனைகளுக்கு ஆளாக்குகின்றன.

இவ்வாறு ஆசிரிய மாணவர்கள் செய்யும் விசனத்திற்குரிய செயல்கள் எம்மை மட்டும் அல்ல எமது எதிர்காலத்தையும் யாழ்ப்பாணத் தேசியக் கல்வியியல் கல்லூரியின் தனித்துவத்தையும் பின்னடைவுகளுக்குள்ளாக்குகின்றன.

இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக இறுதியாக யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை அமைகின்றது.

இதற்கு முன்னர் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள தாம் உரிய முறையில் கல்வியைத் தொடர்வதற்குக் கல்லூரியில் இடவசதிகள் போதாது எனக்காரணங்காட்டி ஆட்சேபம் செய்ததுடன், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் செயற்படவில்லை. இதனால் இறுதியாக நடைபெற்ற யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரிக்கான மாணவர் அனுமதியில் தகுதியுள்ள 200 மாணவ்களை கற்கை நெறிகளுக்குத் தெரிவு செயய முடியாது போய் விட்டது. முன்னைய மாணவர்கள் விட்டுக் கொடுப்புடன் நடக்காததன் காரணமாக 200 மாணவர்களின் எதிர்காலம் வீணடிக்கப பட்டுள்ளது. இது எமது சமூகத்திற்கு ஏற்பட்ட பின்னடைவு ஆகும்.

மாணவாகள் செய்துவரும் வீண் விமர்சனங்களால் விரிவுரையாளர்கள் கூட அர்ப்பணிப்புடன் செயற்பட பின்னிற்கிறார்கள். இவ்வாறான செயற்பாடுகள் எமது பிரதேசத்தின் கல்வி நிலை வளர்ச்சிக்குப் பெரும் முட்டுக்கட்டையாகவுள்ளன.

எனவே மாணவர்கள் கல்லூரியின் வளர்ச்சி எதிர்காலச் சந்ததியின் மேம்பாடுகள் என்பவற்றை கருத்தில்கொண்டு செயற்படுவதுடன எம்மீது விசனம்கொண்ட மாணவர்கள் செய்யும் தப்பான விமர்சனங்களை சமுதாயம் கருத்தில் கொள்ளாது தீர விசாரித்து அறிந்து கொள்ள வேண்டும்.

### புறக்கணிப்பு

யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரிக்காக அரசாங்கமோ பொது நிறுவனங்களோ உதவும் அமைப்புக்களோ எவையும் எந்தவித மேம்பாட்டு உதவிகளையும் ஏற்படுத்தித் தரவில்லை. இதனால் எமது கல்லூா மிகவும் பின்தங்கிப போயுள்ளது.

இலங்கையில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருபவர்கள் தமிழர்களையும் சமாளிப்பதற்காக சிங்களப் பிரதேசங்களுக்கு செய்யும் அபிவிருததித் தொகைகளில் மிக சொற்ப அளவான தொகையையே எமக்குத் தருகின்றார்கள். இந்த சொற்ப அளவான அபிவிருத்தித் தொகையில் எமக்குள்ள தேவைகளைப் பூர்த்திசெய்யமுடியாது அவதிப்பட்டுவருகின்றோம்.

தனித்தமிழர் வாழ்கின்ற பிரதேசத்தில் இருப்பதால், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி பொதுவாகப் புறக்கணிக்கப்படுகின்றது.

இந்தப் புறக்கணிப்புக்களால் 47விரிவுரையாளர்கள் இருக்கவேண்டிய எமது கல்லூரியில் 28விரிவுரையாளர்களே பணியில் உள்ளனர். இதில் 3விரிவுரையாளர்களே நிரந்தர நியமனம் பெற்றவர்கள்.

### வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை

இதைவிட கல்விசாரா ஊழியாகளான பதிவாளர், பொறியியலாளர், சிற்றூழியர் என்பவற்றிற்கான வெறறிடங்கள் நிரப்பப்படவில்லை. குடிநீரவசதி, மினவசதி என்புவற்றை பூர்த்திசெய்வதில் பல அசௌகரியங்களையும் எதிர்கொள்கிறோம்.

இவற்றை நிவிர்த்திசெய்வதற்காக பல அரசியல்வாதிகளின் பின்னாலும் உதவும் நிதிநிறுவனங்களின் பின்னாலும் அலைந்து களைத்து விட்டோம். எமது பிரதேசத்தில் உள்ள தேசிய கல்வியியல் கல்லூரியின் வளாச்சிக்காக குரல் கொடுக்க தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வரவேண்டும்.

எனினும் எமது வேண்டுகோளினதும் அலைச்சல்களினதும் விளைவாக உலக வங்கி கல்லூரியின் கட்டடப் பணிகளுக்காக 465மில்லியன ரூபாவை ஒதுக்கியுள்ளமை வரவேற்கத்தக்கவிடயமே.

பலத்த சவால்களையும் எதிர்கொண்டு நாம் செய்யும் கல்லூரி மேன்பாட்டுப் பணிகளுக்கும் கல்லூரியின் ஒழுக்க விதிகளுக்கும் அமைவாகச செயற்பட்டு மாணவர் சமூகம் எமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இப்பத்திரிகையாளர் மாநாட்டில் ஆலோசனைச் சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா கல்வியியல் கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆற்றப்பட்ட பணிகள் குறித்து விரிவாக விளக்கிக் கூறினார்.

(உ-4)

---

## மனிதநேய கண்ணிவெடியகற்றும் பிரிவினால்

# 4 ஆயிரத்து 500 மிதிவெடிகள்

# கடந்த 4மாதங்களில் அகற்றப்பட்டன

(மருதங்கேணி)

கடந்த நான்கு மாதங்களில் மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவினரால் 2லட்சத்து 98 ஆயிரத்து 193சதுர மீற்றர் நிலப்பரப்பில் 4ஆயித்து 500 மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

தமிழர் வாழ்விடங்கள், பாடசாலைகள், வயல் நிலங்கள் என்பனவற்றில் படையினரால் புதைக்கப்பட்டுள்ள வெடிபொருட்களை மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தங்கள் அயராத முயற்சியின் மூலம் அகற்றிவந்துள்ளனர்.

இவ் வகையில் 2002ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்திலிருந்து டிசம்பர் வரை 1லட்த்து 23ஆயிரத்து 700 சதுரமீற்றர் நிலப்பரப்பில் 4ஆயிரத்து 321 மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

இதன அடுத்தகட்டமாக 2003ஆம் ஆண்டு ஜனவரிமாதம் தொடக்கம் டிசம்பர் மாதம்வரை 8லட்சத்து 9ஆயிரத்து 363ச.மீ.நிலப்பரப்பில் 6ஆயிரத்து 799மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

இவ்வாணடு ஜனவரி மாதத்தில் இருந்து கடந்த மாதம் 2லட்சத்து 98ஆயிரத்து 193ச.மீ.நிலப்பரப்பில 4ஆயிரத்து 496மிதிவெடிகள் அகற்றப்பட்டுள்ளன.

2002ஆம் ஆண்டு தொடக்கம் 2004ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை வாகன பொறிவெடிகள் 18 அகற்றப்பட்டுள்ளன. இப் பணி தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (உ-35)

---

# விடுதலைப் போராட்டம்

# இன்னும் ஓயவில்லை

## வன்னி எம்.பி.கனகரத்தினம்

(வவுனியா)

தற்போது நிலவிவரும் அமைதிச்சூழலை எமது போராட்டம் முடிவடைந்து விட்டதென எண்ணக்கூடாது. இவ்வாறு தமிழத் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடமபெற்ற புலிகளின் குரல் முத்தமிழ் கலையரங்க நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது கலைகளை பெறுமதியாக்குகின்றதன்மை கலைஞர்களுக்கு உண்டு. இவ்வாறான கலை நிகழ்வுகள் மூலம் எமது தேசியப் போராட்டம் வெளிக் கொண்டு வரப்படவேண்டும்.

எமது போராட்டம் முடிவடைந்து விடவில்லை. அண்மையில் நடைபெறற பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது எமது மக்கள் பனி, வெய்யில் என்று பாராது வாக்களித்து எம்மைத் தெரிவு செய்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்தார்கள். தமிழ் மக்களின் உரிமைக்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுக்க நாம் என்றும் தயாராக உள்ளோம்.

எமது மக்கள் எல்லைப் படைகளாகவும்,துணைப் படை களாகவும் போராளிகளுக்குத் தோளோடு தோள கொடுத்து நின்றதால்தான் இன்று பெருவெற்றிகளைப் பெற்றிருக்கிறோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-121)

---

## சமுர்த்தி அமைச்சில் இடம் பெற்ற

## மோசடியை விசாரிக்க ஆணைக் குழு

(கொழும்பு)

சமுர்த்தி அமைச்சில் இடம் பெற்ற 3 பில்லியன் ரூபா மோசடி குறித்து விசாரிப்பதற்கென ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்றை நியமிக்க அரசு தீர்மானித்துள்ளது.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நிதபதி ஒருவர் இந்த ஆணைக் குழுவுக்கு தலைமை தாங்குவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ஐக்கியதேசிய முன்னணி அரசின் காலத்தில் இடம் பெற்ற இந்த நிதிமோசடிக்கு அப்போது சமுாத்தி அமைச்சராக இருந்த எஸ.பி.திஸநாயக்காவே காரணம் எனத் தற்போதைய சமுர்த்தியமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி குற்றம் சாடடியுள்ளார்.

ஏழை மக்களுக்கு நிவாரணம் வழங்கவென 1995ஆம் ஆண்டு பொது ஜன ஐக்கிய முன்னணி அரசினால் ஒதுக்கப்பட்ட 12 பில்லியன் ரூபா நிதியில் கிட்டத்தட்ட 9 பில்லியன் ரூபா சமுர்த்தி அதிகாரிகளின் தனிப்பட்ட கணக்கு வைப்புகளில் இடப்பட்டிருக்கிறது.

அது மட்டுமன்றி 3 பில்லியன் ரூபா தவறாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது.

இதற்குக் காரணமான சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க அரசு தர்மானித்துள்ளதாக அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி மேலும் தெரிவித்தார்.

(உ-60,10)

---

## யெகோவாவின் மாநாடு

(யாழ்ப்பாணம்)

யெகோவாவின் சாட்சிகளுடைய வட்டார மாநாடு, "நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்,உபத்திரவத்திலே சகித்திருங்கள்" என்ற தலைபபில் இரு நாள் மாநாடு, எதிர் வரும் சனி ,ஞாயிறு தினங்களில் வீரசிங்கம மண்டபத்தில் காலை 9.30 மணிமுதல் மாலை4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில், ஞாயிற்றுக்கிழமை "தேசங்கள் யாருடைய மேல் [illegible]க்கை வைக்க வேண்டும்" என்ற பொருளில் உரை இடம்பெறவுள்ளது.

(உ)

## இன்று ஒரு தகவல்

# எது வேண்டும்?

ஒரு கிராமத்திலே சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் தனது விடாமுயற்சியினால் தொழில் துறைகளில் வளர்ச்சி பெற்றுப் பெரும் பணக்காரனானார். இவருடைய கடின உழைப்பும் விடாமுயற்சியுமே இவருடைய உயர்வுக்கும் சம்பாத்தியத்திற்கும் காரணமாயமைந்தன.

சமூகத்திற் பெரும் மதிப்பைப் பெறும் அளவிற்கு உயர்ந்த நிலையிற் பொருளாதார வளம் உடையவரான இவர் பிறர் துன்பங் கண்டு உதவுவதிலும் முன்நிற்பவர் என்பதால், மக்களால் நன்கு மதிக்கப்பட்டார். ஆயினும் இன்றைய இளம் சமுதாயத்தில் உள்ள படித்த பட்டங்கள் பெற்ற சிலர் இவரைப் பொறாமையோடும், ஏளனத்தோடும் பார்த்தார்கள்.

தாங்கள் பல்கலைக்கழகம் சென்று படித்துப் பட்டஙகள பெற்றும் தொழில் கிடைப்பதாயுமில்லை, தொழில் கிடைத்தாலும் நிறைய சம்பாதிக்க முடியுதில்லையே என்னும் மனத்தாங்கல் காரணமாகவே சமூகத்தில் மதிப்பாயிருக்கும் இவருடைய பெருமையை அவர்கள் ஜீரணிக்க முடியாமலிருந்தனர்.

தன்னம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் உயர்ந்த நிலைக்கு வந்த பெரியார், தான் முன்னர் இருந்த நிலையை மறக்கவில்லை. தன்னிடம் வருவோர்க்கும் தன்னுடன் பழகுவோர்க்கும் இதனை அடிக்கடி கூறி மற்றோருக்கு முன்னேற வழி இதுதான் எனப் புத்திமதி கூறுவார். ஆயினும் பலவளங்களும் நிறைந்தும் நல்வாழ்வு வாழும் இவருக்குத் தான் முதுமையடைவதையிட்டுப் பெருங் கவலை உள்ளத்தை வாட்டி வந்தது.

உள்ளத்தில முதுமையடைவதையிட்டு விரக்தியுடையவரான இவரிடம் ஒருநாள் இரு இளைஞர்கள் வந்தார்கள். அந்த இளைஞர்கள் "பல்கலைக் கழகத்தில் படித்துப் பட்டங்கள் பெற்றுப் பல வருடங்கள் ஆகியும் தொழில் ஏதுமில்லையே உங்களைப் போன்றவர்கள் படிப்புக் குறைந்தவர்களாயிருந்தும் உழைத்து உயர்ந்திருக்கின்றீர்களே! எங்களுக்கும் உதவி செய்ய முடியுமா?" என மன்றாடினார்கள்.

அப்போது பெரிவயவர் "உழைப்பால் உயர்ந்த எனக்கும் ஒரு கவலை இருக்கின்றது. கவலையை நினைத்துக் கொண்டிராது தன்னம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் எனது முயற்சியில் கண்ணுங் கருத்துமாய் இருந்து வருகிறேன். இதே போல நீங்களும் வாழ்க்கையில் முன்னேறப் பழக வேண்டும். படித்தாலோ, பட்டம் பெற்றாலோ மட்டும் வாழமுடியாது. வாழ்க்கையில் முயற்சி தான் முக்கியமானது.

இளைஞர்களான நீங்கள் வேலை தேடி அலைந்து திரியாது மன உறுதியுடன் எனது தொழில்களைப் பார்க்கலாம்" என்றார்.

பெரியவரின் உதவிடும் வார்த்தையைக் கேட்ட இளைஞர்கள் "நீங்கள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமோ எங்களிடம் இருக்கும் எதைத் தர வேண்டுமோ அதைத் தருகின்றோம்" என்றனர்.

அவர்களைப் பார்த்து ஏளனமாகச் சிரித்த பெரியவர் "நீங்கள் இளைஞர்கள் உங்கள் இளமை எதையும் பேசவைக்கின்றது.

நானோ முதுமையடைந்து கொண்டிருக்கின்றேன். உங்கள் இளமையை எனக்கு நீங்கள் தரமுடியுமானால் அதுவே எனக்கு இன்று தேவையானது. நீங்கள் எனது உழைப்பைக் கண்டு பொறாமை அடைகின்றீர்கள்.

நானோ உங்கள் இளமையைக் கண்டு உங்கள் இளமை எனக்கு இருந்தால் எவ்வளவு நல்லது என சிந்திக்கின்றேன். எனவே உங்கள் 'இளமைக் காலத்தை வீணாக்காது தன்னம்பிக்கையுடனும், விடாமுயற்சியுடனும் முன்னேற முயற்சியுங்கள் என்றார்.

**நீர்வை மணி**

## பற்றைகள் அகற்றல்

(இணுவில்)

வலி.தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட காங்கேசன்துறை வீதி, உடுவில் வீதி போன்றவற்றின் இரு மருங்குகளிலும் நீண்ட காலமாக வளர்ந்து பற்றைக்காடுகளாகக் காட்சி தரும் பற்றைகளை சபை ஊழியர்கள் அகற்றி வருகின்றனர். தினமும் காலை முதல் நண்பல் வரையும் 5ற்கு மேற்பட்ட ஊழியர்கள் இப் பணியில் ஈடுபட்டுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது (உ-122)

# சந்திரிகா-பிரபா இடையில் சந்திப்பை ஏற்படுத்த முயற்சி

## ஆங்கிலப் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனுக்கும் இடையிலான சந்திப்பொன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கொழும்பு ஆங்கிலப பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



நோர்வே தரப்பின் ஊடாகவே இச்சந்திப்புக்கான ஏறபாடுகள் செய்யப்படவுள்ளதாகவும் 'டெய்லி மிரர்' ஆங்கில நாளேடு தனது செய்தியில் குறிப்பிட் டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்த நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் தலைமையிலான நோர்வேத் தூதுக் குழுவினர் கடந்த திங்களன்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினர். இக் கலந்துரையாடலின் போதே தமிழீழத் தேசியத் தலைவருக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்புக்கான முன்னேற்பாடுகளைச் செய்வது குறித்து அரச தரப்பில் கலந்துரையாடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.



இதேவேளை, இதுகுறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் உத்தியோகபூர்வமாக எதுவும தெரிவிக்கப்படவில்லை என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (உ)

# பொய்யை உண்மையாக்கி தவறான ஆட்சி நடத்துகிறது

## ஐ.ம.சு.மு. மீது ஹெல உறுமய பாய்ச்சல்

(கொழும்பு)

பொய்யானவற்றை உண்மை எனக் கூறி ஐ.ம.சு.மு. அரசாங்கம் மக்களைத் தவறாக வழி நடத்துகிறது என ஹெல உறுமய குற்றஞ் சாட்டியுள்ளது. இராணுவ புலனாய்வாளர் வசந்த கொலம்பாகே கொல்லப்பட்டதைக் கண்டித்து வெளியிட்ட கடுமையான ஊடக அறிக்கையில், ஹெல உறுமய இவ்வாறு தெரிவித்துள்ளது.

நாட்டின் பாதுகாப்பை கூட்டணி அரசிடம் ஒப்படைத்தமையானது, நரியை கோழிப்பண்ணைக்குள் விடுவது போன்றது. இராணுவ புலனாய்வாளர் மீதான பாரிய கொலைப் பட்டியல் அணமைய கொலை மூலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முன்னர் இக்கூட்டணி அரசாங்கம் நோர்வே தரப்பினரை வெள்ளைப்புலிகள் என விமர்சனம் தெரிவித்திருந்தது. தற்போது அவர்களை வரவேற்கின்றனர்.

தற்போது அரசாங்கம் போர் நிறுத்த உடன் படிக்கையை மீறுவதற்கு புலிகளை அனுமதித்துள்ளது. புலிகள் பக்கம் ஹெல உறுமய செயற்படுவதாக அரசாங்கம் குற்றஞ்சாட்டினாலும் அவர்களே தமிழீழம் உருவாவதற்கு வழியமைத்துக் கொடுக்கிறார்கள்.

தேர்தல் சமயத்தில் ஜே.வி.பியினர் மக்களைத் தவறாக வழிநடாத்தி எமது வாக்குகளை அபகரித்தனர். தற்போது அவர்களது சுயரூபம் வெளிப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-6)

## இராசி பலன்

**13.05.2004**

**(சித்திரை 31, வியாழக்கிழமை)**

**சதயம் மரண பி.ப 1.45 மணிவரை**

**நவமி காலை 7.53 மணிவரை**

**இராகுகாலம் 1.23-2.53 மணிவரை**

**சுபநேரம் 7.23-8.53 மணிவரை**

**மேடம்**

பெருமையடைதல், எடுத்த காரியம் கைகூடும், போசன நன்மை, கலந்துரையாடல்.

**இடபம்**

முயற்சி கைகூடும், தொழில் சிந்தை, மேன்மை, நண்பர்கள் உதவி.

**மிதுனம்**

புதிய சிந்தை, அதிகபிரயாசை, கட்டுப்பாடு, பிரயாணம்.

**கடகம்**

ரோக நிலை, கலகம், வாகனபயம், புத்தி சாதுரியம்.

**சிங்கம்**

உறவினர் சந்திப்பு, காரிய அனுகூலம், தொழில் வருமானம், கீர்த்தி.

**கன்னி**

எடுத்தகாரியம் கைகூடும், ஆரோக்கியம், கௌரவமானநிலை, திடீர் பயணம்.

**துலாம்**

வியாபார நன்மை, குடும்பக் கவலை, எதிர்பாராத நன்மை, முயற்சி தாமதம்.

**விருச்சிகம்**

தாய்வழி உறவு, மனச்சோர்வு, காரிய தாமதம், சிந்தனை மிகுதி.

**தனுசு**

கலந்துரையாடல், தொழிலில் ஆர்வம், எடுத்த காரியம் கைகூடும், சகோதரர் உதவி.

**மகரம்**

அதிக செலவு, கௌரவக்குறைவு, முயற்சி தாமதம், தொழில் கஷ்டம்.

**கும்பம்**

நண்பர்கள் சந்திப்பு, நல்ல முயற்சி, விருந்துபசாரம், பிராயண நன்மை.

**மீனம்**

அமைதிக்குறை, சுப செலவு, பிரயாணம், காரிய தாமதம்.

**(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)**

*வளவன்*

## மன்னார் சிறார்கள் சமாதானச் செய்தியுடன் தென்பகுதிக்குச் செல்வர்

(மன்னார்)

மன்னார் வாழ்வோதய நிறுவனத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த 50 சிறுவர்கள் இம்மாதம் 21 ஆம் திகதி 3 நாள் உறவுப்பால நிகழ்வின் ஊடாக சமாதானச் செய்தியினை தென்பகுதிக்கு எடுத்துச் செல்லவுள்ளனர்.

21ஆம்திகதி மன்னாரில் இருந்து அனுராதபுரம் சென்று அங்குள்ள சிறார்களுடன் இணைந்து சமாதானத்தின் தேவையினை கலை நிகழ்வுகள மூலமாக இவர்கள் பகிர்ந்துகொள்ளவுள்ளனர்.

மறுதினம் குருநாகல் மாவட்டத்திலும், அதற்கடுத்த தினம் சிலாபம் மாவட்டத்திலும் இதே போன்ற நிகழ்வுகளை நடாத்தி சமாதானத்திற்காக தம்மால் இயன்ற விழிப்புணர்வை ஏற்படுத்தவுள்ளனர்.

இன்றைய சூழலில் சிறாரின் சமாதான உறவுப் பால நிகழ்வுகள் நாட்டில் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு அவசியமாகவுள்ளன.

இதனடிப்படையில் இந்த நிகழ்வை மன்னார் மறை மாவட்டத்தின் திருப்பலாத்துல சபை அமைப்பானது மன்னார் வாழ்வோதயத்தின் ஊடாக ஏற்பாடு செய்துள்ளது. (உ-121)

## குடிவரவு, குடியகல்வு சட்டம் மீளாய்வு

(கொழும்பு)

நாட்டிற்குள் போதைப்பொருட்களை இலகுவாக கடத்துவதற்கு வசதியாக தற்போதுள்ள குடிவரவு, குடியகலவு சட்டம் காணப்படுவதால், அதனை மீளாய்வு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு சட்ட அமைச்சு செயலாளர் திலக்ரணவிராஜா தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை தெற்காசியாவில் போதைப பொருள் பாவனை அதிகரித்துவரும் நாடாக விளங்குகிறது. சில மாதங்களுக்கு முன் குடிவரவு, குடியகல்வு சட்டங்கள் தளர்த்தப்பட்டன. சார்க்நாடுகளைச் சேர்ந்த எவரும் இங்கு விசா இல்லாமல் நுழைய முடியும். இவை தவறாகப் பயன்படுத்தப்படுவதால் இச்சட்டங்களை மீளாய்வு செய்யவுள்ளோம் என்றும் தெரிவித்தார். (உ-6)

# சௌயிப் அக்தர் பிடிவாத குணம் மிக்கவர்

# பாக். கிரிக்கெற் சபைத் தலைவர் கண்டனம்

பாகிஸ்தான் கிரிக்கெற் அணியின் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளரான சௌயிப் அக்தர் பற்றிய விசாரணைகள் இன்னமும முடிவிற்கு வராத நிலையில், பாகிஸ்தான் கிரிக்கெற் சபைத்தலைவர் தனது கடும் விமர்சனங்களை வெளியிட்டுள்ளார்.

இதன்படி மிகவும் கடுமையான பிடிவாதக் குணத்தைக் கொண்டிருந்தமையினாலேயே சௌயிப் அக்தருக்கு மருத்துவ பரிசோதனை விசாரணைக்குழுவிடம் பதில்சொல்ல வேணடிய நிலை ஏற்பட்டதாக பாகிஸ்தான் கிரிக்கெற் சபைத் தலைவரான சஹாரியார் ஹாண் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன் ராவல் பிணடியில் நடைபெற்ற மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெற் போட்டியில் தான் உபாதைக்குள்ளானதாகத் தெரிவித்து சௌயிப் அக்தர் போட்டியில் இடைநடுவில் வெளியேறியிருந்தார். எனினும் பின்னர் பாகிஸ்தான் அணியின் இரண்டாவது இன்னிங்ஸ் துடுப்பாட்டத்தின் போது சௌயிப் அக்தர் தான் துடுப்பாடியிருந்தார். இந்நிலையில் பாகிஸ்தான் அணிசாரபில் களத்தடுப்பில் ஈடுபடாத அக்தர் சிறப்பாக துடுப்பெடுத்தாடியதால், இவர்மீது சந்தேகங்கள் வலுத்தன. இந்நிலையில் பாகிஸ்தான் கிரிக்கெற்சபை அக்தர் மீது மருத்துவ விசாரணைக்கு உத்தரவிட்டது.

இதற்கென 4பேர் கொண்ட மருத்துவ விசாரணை குழுவையும் பாகிஸ்தான் கிரிக்கெற் சபை நியமித்திருந்தது. இக் குழுவினர் சௌயிப் அக்தரிடம் விசாரணைகள் மற்றும் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தனர் எனினும் இந்த முடிவு முழுமையாக வெளிவராத நிலையில் இங்கிலாந்தின் டுர்ஹாம் அணிக்காக விளையாடுவதற்கு அக்தர் இங்கிலாந்து பயணமாகிவிட்டார்.

இந்த நிலையில் பாகிஸ்தான் செய்தி ஊடகம் ஒன்றிற்கு அளித்த பேட்டியிலேயே சஹாரியார்ஹாண் இந்தக் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ராவல் பிண்டியில் நடைபெற்ற போட்டியில் சௌயிப் அக்தர் திடீரென்று வெளியேறியமை தொடர்பாக அவரிடம் என்ன நடந்தது என்று நான் நேரடியாகக் கேட்டிருந்தேன். உபாதைக்குள்ளானது பற்றி திட்டவட்டமாக எதுவும் அவா கூறாத நிலையில், பந்து வீச முடியாவிட்டால் களத்தடுப்பிலாவது ஈடுபடலாமே என்று அவரிடம் நான் கேட்டிருந்தேன். எனினும் இதற்கும் அவர் பதில் எதுவும் கூறாமல் சென்றுவிட்டார் என்று சஹாரியார் ஹாண் தெரிவித்திருந்தா.

இதேவேளை மிகக் கடுமையான வலியில் இருந்தும் தொடர்ந்து விளையாட அசீம் ஹமால் விருப்பம் தெரிவித்திருந்தமையையும் பாகிஸ்தான் கிரிக்கெற் சபைத் தலைவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

மேலும் தன்னால் முடியாத நிலையல் இருந்தபோதும் பாகிஸ்தான் அணிக்காகத் தொடர்ந்து விளையாட இளம் வீரர் ஒருவர் முன்வரும் போது, அணியின் சிரேஷ்ட வீரர் ஒருவர் இவ்வாறு நடந்து கொண்டமை தனக்கு மிகுந்த கோபத்தை ஏற்படுத்தியதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

மூத்த வீரர் தமது அணியில் தமக்கான பொறுப்பை மிகச் சரியாக உணர்ந்துகொள்ளாமல் நடந்தால் இளம் வீரர்களின் மனோ நிலையும் பாதிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் அக்தர் குறித்த இறுதி மருத்துவ பரிசோதனை அறிக்கை வெளிவராத நிலையில், சஹாரியார்ஹான் பாகிஸ்தான் அணிக்காக உயிரைக்கொடுத்தும் விளையாடக்கூடிய வீரர்கள் யார் யார்என்று தன்னால் கூறமுடியும் என்றும் தெரிவித்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டியதாகும் (உ-68)

## நீக்கப்பட்ட வெள்ளையின வீரர்கள் நட்டஈடு கோரி வழக்குத் தொடர்வர்

சிம்பாப்வே கிரிக்கெற் ஒன்றியத்திற்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டுவந்த சிம்பாப்வே கிரிக்கெற் அணியின் 15வெள்ளையின வீரர்களும், சிம்பாப்வே கிரிக்கெற் ஒன்றியத்திடம் நடடஈடு கோரி வழக்குத் தொடரவுள்ளனர்.

தமது தொழில்சார் கிரிக்கெற் வாய்பிற்கு முற்றப்புள்ளி வைக்கும்வகையில் சிம்பாப்வே கிரிக்கெற் ஒன்றியம் செயற்பட்டுள்ளதாகக் கூறியே சிம்பாப்வே கிரிக்கெற் ஒன்றியத்திடம் நட்டஈடு கோரவுள்ளனர்.

சிம்பாப்வே கிரிக்கெற் அணி பிரிவுக் குழுவுடன் கடந்த ஏப்ரல் மாதம 2ஆம் திகதி ஏற்படட முரண்பாடு காரணமாக மேற்படி 15வெள்ளையின வீரர்களும் அந்த அணியில் இருந்து நீக்கப்பட்டனர்.

இதனால் தமது கிரிக்கெற் ஜீவனோபாயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருப்பதாகவும், தங்களுக்கு சிம்பாப்வே கிரிக்கெற் ஒன்றியம நட்டஈடு தரவேண்டும் எனவும் இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, சிம்பாப்வே கிரிக்கெற் அணியின் முன்னாள் தலைவர் கீர்ஸ்ரீக் உட்பட்ட 15வெள்ளையின வீரர்களும் சிம்பாப்வே கிரிக்கெற் ஒன்றியத்தின ஒழுக்கக் கோவைகளை மீறியுள்ளதாலேயே தாம் அவர்களை அணியில் இருந்து நீக்கியதாக சிமபாப்வே கிரிக்கெற் ஒன்றியத்தலைவர் தெரிவித்தார். (உ-61,10)

## தூஸ்ரா பந்து வீச்சுக் குறித்து முரளிதரனுக்கு அறிவுறுத்தல்

கிரிக்கெற் உலகில்உலக சாதனையை நிலைநாட்டியுள்ள இலங்கைக் கிரிக்கெற் அணியின்நட்சத்திர சுழல் பந்து வீச்சாளரான முத்தையா முரளிதரன் தூஸ்ரா பந்து வீசுக்களை மேற் கொள்ளக்கூடாது என இலங்கைக் கிரிகெற் கட்டுப்பாட்டுச் சபை அவருக்கு அறிவுறுத்தியுள்ளது.



கிரிக்கெற் போட்டியில் விளையாட்டு முறைமைகளை மீறுவதாக முத்தையா முரளிதரனின் தூஸ்ரா பந்துவீச்சு அமைகின்றது என்று ஐ.சி.சியின் தலைமை நிர்வாகியான மல்கம்ஸ்ரீ தெரிவித்ததையடுத்தே இலங்கை கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை இவ்வாறு அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை முத்தையா முரளிதரன் தூஸ்ரா பந்துவீச்சினை மேற்கொள்ளக்கூடாது என இலங்கைக் கிரிக்கெற் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளதை தாம் வரவேற்பதாக சர்வதேச கிரிக்கெற் கவுன்சில் தெரிவித்துள்ளது. (உ-60,10)



மாட்ரிட்டில் நடைபெறும் யூரோப்பியன் நீச்சல் சம்பியன்ஷிப் போட்டியில் பிரான்ஸை சேர்ந்த ரபயர் நோகர்

## கால்பந்தாட்ட போட்டிக்கான வீரர்கள்தெரிவு

மலேசியாவில இவ்வருடம் நடைபெறவிருக்கின்ற 18வயதிற்குட்பட்ட பாடசாலை அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டச சுற்றுப்போட்டியை முன்னிடடு, இலங்கைக் குழுவிற்கான வீரர்கள தெரிவுசெய்யப்படடுவருகின்றனர். இதில் கொழும்பு மாவட்டப் பாடசாலை அணிகளின் வீரர்களுக்கான தெரிவுகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் வெளிமாவட்டப் பாடசாலை அணிகளைச் சேர்ந்த வீரர்களுக்கான தெரிவு இம்மாதம் 18 ஆம் திகதி நடைபெறுவதறகான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத் தெரிவுகள் யாவும் கொழும்பு கென்ற் பேதரிஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

1986ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்குப் பின்னர் பிறந்த வீரர்கள், கல்லூரி அதிபரின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட புகைப்படம மற்றும் கடிதத்தோடு குறிப்பிட்ட தினங்களில் மேற்படி தெரிவு நிகழவில் கலந்துகொள்ள முடியுமென இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனத்திரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-68)

## கிரிக்கெற் போட்டி


சென்னையில் நடைபெற்ற 15 வயதிற்குட்பட்டோருக்கான கிரிக்கெற் போட்டியில் ஸ்ரீ பாலாஜி கிரிக்கெற் அக்கடமியின் வி.ஸ்ரீ கிருஸ்ணா 15ரன் மட்டும் விட்டுக் கொடுத்து ஹாடரிக் உட்பட 4விக்டுக்களை வீழ்த்தினார்.

இதையடுத்து பாலாஜி கிரிக்கெற் அக்கடமி 40ரன் வித்தியாசத்தில் சங்கர் கிரிக்கெற் கிளப் அணியை வீழ்த்தியது.

பாலாஜி அணி 30 ஓவரில் 6விக்கெற் இழப்பில் 145ரன் குவித்தது. அணியின் முகமது யூனிஸ் 26 எஸ்.அஸ்வின் 32, மணிகண்டன் 28ரன் குவித்தனர். (உ)

## மன்னார் அணி வென்றது

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளிமுனை வென்லூசியஸ் கழக கால்பந்தாட்ட அணியினருக்கும் குருநகர் பாடுமீன் கழக கால்பந்தாட்ட அணியிருக்கும் இடையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற சினேக பூர்வ கால்பந்தாட்ட போட்டியில் சென்லூசியஸ் அணி 1:0என்ற கோல்கணக்கில் வெற்றியைச் சுவீகரித்துக் கொண்டது. (உ)




ஒலிம்பிக் போட்டிக்குத் தயாராகும் பெண்கள் கரப் பந்தாட்டப் போட்டியில் ரஷ்யாவைச்சேர்ந்த அனஸ்ராசியா பெலிக்காவினால் அடிக்கப்பட்ட பந்தைத் தடுக்கும் தென் கொரிய வீரர் கிம் கியாங்.

# விளையாட்டுச் செய்திகள்

# இந்திய டெஸ்ட் கிரி.அணியில் இடம்பிடிப்பது உலகிலேயே மிகவும் கடினமான பணி

## சஞ்சய் பங்கார் கருத்து

இந்திய டெஸ்ட் கிரிக்கெற் அணியில் மீண்டும் இடம்பெற சஞ்சய் பங்கார் பெரிதும் ஆர்வம் கொண்டுள்ளார்.

ரயில்வே அணியில் இடம்பெற்ற சஞ்சய் பங்கார், 2002-2003 நியூசிலாநது அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில பங்கேற்ற இந்திய அணியில் இடம்பெற்றிருந்தார். இத் தொடரில் இந்தியா தோல்வியைத தழுவியதால் அதிலிருந்து பங்கார் தொடர்ந்தும் அணியில் இடம்பெற முடியாமல் போய்விட்டது.

வங்கதேஸத் தலைநகர் டாக்காவில் கடந்த திங்கட்கிழமை உள்ளூர் பத்திரிகையான டெய்லி ஸ்டாருக்கு அளித்த பேட்டியில் இதுபற்றி பங்கார் மேலும் கூறியதாவது,

தற்போது அணிக்குத் திரும்ப பிரயத்தனம் செய்து வருகிறேன். என்றாலும் அணியில் ஆகாஷ் சோப்ரா, யுவராஜ்சிங் போன்ற சிறந்த வீரர்கள் உள்ளதால் இடம் பிடிப்பது கடினமாக இருக்கும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

12 டெஸ்ட் போட்டிகளில் தொடக்க வீரராக களமிறங்கியுள்ளேன். இதில் 7ஆட்டங்களில் அணி வெற்றிபெற்றுள்ளது.

இதுவரை விளையாடியதில் டெஸ்ட் போட்டிகளில் சராசரியாக 29.37ரன் என மொத்தம் 470ரன்களைக் குவித்துள்ளேன்.

நான் நல்லமுறையிலேயே ஆடியுள்ளேன். இருப்பினும் இந்திய டெஸ்ட் கிரிக்கெற் அணியில் இடம் பிடிப்பது என்பது உலகிலேயே கடினமான பணிகளில் ஒன்று.

இந்திய அணியில் நெருக்கடிகள் அதிகம். இரண்டு அல்லது 3 ஆட்டங்களில் நமது ஆட்டத் திறமை குறைவாகிவிட்டால் கூட அணியில் நீடிப்பது கடினம். நானும் 2ஆட்டங்களில் சரியாக விளையாடவில்லை. அதனால் அணியில் இருந்து வெளியேற்றப்பட்டேன் என்றார்.

2003இல் தென்னாபிரிக்காவில் உலகக்கோப்பைப் போட்டியில் பங்கேற்ற இந்திய அணியில் பங்காரும் இடம்பெற்றிருந்தார். இருப்பினும் ஒரு போட்டியில் மட்டுமே விளையாடும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும் -குறள்

# வலம்புரி

## யப்பானின் உதவி கிடைக்குமா?

இலங்கையில் யுத்தநிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டபின்னர் இலங்கைக்கு உதவி செய்ய முன்வந்த நாடுகளில் யப்பான் முதன்மையானதாகும். இலங்கையில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தால் அழிந்து- சிதைந்து போன வடக்குக் கிழக்கு மாகாணங்களைப் புனரமைப்புச் செய்வதற்கும் யப்பான் உதவி செய்யத் தயாராகவிருந்தது. எனினும் சமாதானப் பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்ட கையோடு யப்பானின் உதவிகளும் தடைப்பட்டிருந்தது.

சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு ஓர் நிரந்தரத்தீர்வைக் காணுகின்ற நிலையில் இலங்கைக்கான உதவியை வழங்குவதற்கே யப்பான் உள்ளிட்ட வெளிநாடுகள் தயாராக இருக்கின்றன. ஆனால், சமாதானப் பேச்சுக்கள் தடைப்பட்ட நிலையில், வெளிநாடுகளின் உதவியைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் இலங்கை அரசு இருப்பதனால் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டிய கட்டாயத்திற்கு அரசை உள்ளாக்கியுள்ளது.

இங்கு, சமாதானப் பேச்சுக்களின் ஆரோக்கியம் எவ்வாறு இருக்கின்றது என்பதைவிட சமாதானப் பேச்சுக்கள் என்று கூறிக்கொள்வதன் மூலம், வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொள்வதே அரசின் இலக்காக உள்ளது.

இவை ஒருபுறம். ஆனால் மறுபுறத்தில் உதவி கிடைக்கவேண்டிய வடக்குக்கிழக்கு வாழ் தமிழ் மக்கள் எதுவித உதவிகளும் இன்றி யுத்தம் தந்த பாரிய அழிவுகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

உலக நாடுகள் இலங்கைக்கு உதவ முன்வந்த போதிலும், அஃது சமாதான முயற்சியில் அரசு காட்டிவரும் அசமந்தப் போக்கினால் தடைப்பட்டுக் கிடக்கின்ற நிலைமையில் சமாதான முயற்சி மீண்டும் தொடரப்படுவதாகக் காட்டி வெளிநாடுகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்ள அரசு முற்படுகின்றதெனில் அந்த உதவி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு தமிழ் மக்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கிலல்ல என்பதையும் உலக நாடுகள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

ஆக, யுத்தத்தைக் காட்டி உலக நாடுகளிடம் பெற்றுக்கொள்ளக்கூடிய நிதியை தென்னிலங்கையின் அபிவிருத்திக்கும், தென்னிலங்கையில் முதலீடுகளையும் உருவாக்கி சிங்கள மக்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்குவதற்காகவுமே என்ற உண்மை அறியப்பட வேண்டும்.

இந்நிலையில் வெளிநாடுகளின் உதவி அரசின் ஊடாக வழங்கப்படுமாக இருந்தால், அது தமிழ் மக்களுக்கு எவ்வகையிலும் கிடைக்கமாட்டாது என்பது உறுதி. இதனை அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த யப்பானியத் தூதுவர் நேரில் அறிந்திருப்பார் என நம்பலாம்.

எனவே, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களுக்கு வெளிநாடுகளின் உதவி அவசர தேவையாகவுள்ளது. ஆனால் அந்த உதவி அரசினூடாக வழங்கப்படுமாக இருந்தால் அது குறித்த இலக்கினருக்குக் கிடைக்காதென்ற நிலையில், அந்த உதவிகளை உதவி வழங்கும் நாடுகள் தமது நேரடிக்கண்காணிப்பில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு கிடைக்கவழி செய்யவேண்டும்.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்னரே வெளிநாட்டு உதவிகளை வழங்குவதென்ற கொள்கைகளை மாற்றி யுத்தத்தால் பாதிக்கப்பட்டு, அகதி முகாம்களில் வாழ்கின்ற மக்களின் நலன்களுக்கு உதவக்கூடிய வகையில் வெளி நாடுகள் தமது உதவிகளை விரைவாக வழங்க முன்வரவேண்டும்.

ஆனால், வழங்கப்படுகின்ற உதவி யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைப்பதை உதவிவழங்கும் நாடுகள் உறுதி செய்துகொள்வது மிகவும் அவசியமானதாகும்.

# அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி விரிவான முறையில் சமாதானப் பேச்சு

## புதிய அரசு முன்னெடுக்கும் என கதிர்காமர் பேட்டி

(கொழும்பு)

அமொிக்காவிற்கு உத்தி யோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், சி.என்.என். தொலைக் காட்சிக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.



விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதை ஏற்றுக் கொள்வதாகவும், அவர்களுடன் மட்டுமே பேச்சுக் கள் தொடரும் என்றும் இரு நாட் களுக்கு முன்னர் நோர்வே பிரதி நிதிகளிடம் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ள நிலையில், அதற்கு முற்றிலும் முரண் பட்ட ஒரு கருத்தை, சந்திரிகாவின் அமைச்சரவையிலுள்ள வெளிநாட்டு அமைச்சர் தெரிவித் திருப்பது பலத்த சந்தேகத்தை உண்டு பண்ணியுள்ளது.

இதேவேளை, இதற்கு முன் னர் ஆட்சியிலிருந்து ஐ.தே.மு. அரசு, தனியாக விடுதலைப் புலி களுடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடாத்தியதை மக்கள் வெறுத்ததனாலேயே, தேர்தலில் அக் கட்சி படுதோல்வி கண்டதாகக குறிப்பிட்ட கதிர்காமர், வெற்றி பெற்ற தமது கட்சி, அனைத் துக் கட்சிகளையும் உள்ளடக் கிய ஓர் விரிவுபட்ட பேச்சுவார்த் தையைமட்டுமே மேற்கொள்ளும் என்றும் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை,அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரான கொண்டலீசாரைசைச் சந்தித்த கதிர்காமர், அதைத தொடர்ந்து அமெரிக்க வெளி விவகார அமைசசர் கொலின பவலையும் சந்திக்கவிருந்தார்.

நோர்வேத் தரப்பினரின் பணி குறித்துக் கேட்கப்பட்ட இன்னுமொரு கேள்விக்குப் பதிலளிக் கையில், நோர்வே பிரதிநிதிகள் வெறும் இடைத்தரகர்களாக மட்டுமே பணியாற்ற அனு மதிக்கப்படுவார்கள் எனறும், முன்பு போல் பேச்சுவார்த்தை யின் அனுசரணை யாளர்களாக அவர்கள் பணியாற்ற ஒருபோதும் அரசு அனுமதிக்காது என்றும் கூறியுளளார். அடுத்தகட்டப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு இன்னும் இரண்டு மூன்று மாதங்களாவது எடுக்கும் என்றும் அவர் கூறியுள்ளார். (உ)

## முல்லை வைத்தியசாலையில் 5,784 நோயாளருக்கு சிகிச்சை

(மருதங்கேணி)

முல்லைத்தீவு நகரப்பகுதியில இயங்கிவரும் முல்லை மாவட்ட கட்டம 1 வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் கடந்த மாதம் 5 ஆயிரத்து 784 நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளனர்.

சளிக் காய்ச்சல் ,தொய்வு, இருமல், நாய்க்கடி போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களே கூடுதலாகச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

கடந்த மாதம் இங்கு 7 மகப் பேறுகள் நிகழ்ந்துள்ளதுடன் நோயாளா விடுதியில் 233நோயாளர்கள் தங்கி நின்று சிகிச்சை பெற்றுள்ளனர்.

மேலதிக சிகிச்சைக்காக 35நோயாளர்கள் இங்கிருந்து புதுக்குடியிருப்பு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-35)

### கந்தப்பொல சம்பவம்

## ஜனாதிபதியின் அணுகுமுறை பற்றி ஜாதிக ஹெல உறுமய கண்டனம்

(கொழும்பு)

கநதப்பொல சம்பவத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பாரபட்சமாக நடந்து கொண்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

கந்தப்பொலவில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தமிழ்க் குடும்பங்களுக்கு நட்ட ஈடு வழங்கிய ஜனாதிபதி அச்சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட 33 சிங்கள குடும்பங்களுக்கு ஏன் நட்ட ஈடு கொடுக்கவில்லை? எனவும் ஜாதிகஹெல உறுமய கேள்வி எழுப்பியுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆறுமுகம் தொண்டமானின் ஆதரவைப் பெறும் வகையிலேயே இவ்வாறு நடந்து கொண்டுள்ளார் எனவும் ஜாதிக ஹெல உறுமய குற்றஞ்சாட்டியுள்ளது.

இதற்கிடையில் ஸ்ரீ பாதகல்வியியல் கல்லூரியில் உள்ள தமிழ் மாணவர்கள் சிலர் சிங்கள மாணவர்களைத் திட்டமிட்டு வெளியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் இது தொடர்பாக உடன் விசாரணைகளை நடத்துமாறும் ஜாதிக ஹெல உறுமயக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதியிடம் முறையிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-10)



### சாயி அருளமுதம்

இன்று நான் உங்களுக்கு தரக் கூடிய ஒரே ஒரு செய்தி ஒரே ஒரு படிப்பினை யாதெனில் பாரத நாட்டின் மிகப் பெரிய பாரம்பரியத்தை இந்த நாட்டின் சகல பாகங்களிலும் மூலைமுடுக்குகளிலும் அன்பைப் பரப்பும் படி கேட்டுக்கொள்வதேயாம்.

அவ்வாறு செய்தால் நமது நாடு மீண்டும் மனித வர்க்கத்தினருக்கு ஆத்மீக வழிகாட்டியாகி உலகம் முழுவதையும் தெய்வீக அன்பினால் நிரப்பும்.

நன்றி

நாளாந்த நற்சிந்தனை

## மக்கள் விருப்பத்தை நிறைவேற்ற அரசாங்கத்தால் முடியாதுள்ளது

### ரில்வின் சில்வா

(கொழும்பு)

மக்கள் தாம விரும்பிய அரசாங்கம் ஒன்றைத் தெரிவு செய்துள்ள போதிலும் அவர்கள் வி[illegible]யதை அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியாதுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைச் செயலாளர் ரில்வின் சில்வா கூறியுள்ளார்.

மகரகமவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது இவ்விதம் குறிப்பிட்ட அவர் மேலும் கூறுகையில்,

மக்களின் எதிர்பாாப்புக்களையும், தேவைகளையும் நிறைவேற்றக்கூடிய வகையில் செயற்படக்கூடிய வழிமுறைகள் தொடர்பாக எமது கட்சி ஆராய்ந்து வருகின்றது. நாட்டின் அரசியல் யாப்பு, அரசியல் வாதிகளின் தேவைக்காக அல்லாது மக்களின் தேவைக்கேற்ப அமையவேண்டும்.ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு ஆட்சி அமைப்பதற்கான ஆணையை நாட்டு மக்கள் வழங்கியுள்ளனர்.

அரசியல் யாப்புக்களைத் தயாரிப்பவர்கள் தமது தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளும் நோக்குடனேயே செயற்பட்டுள்ளனர் என்றார். (உ)

## வதிவிடப் பயிற்சி

(ஊர்காவற்றுறை)

யாழ். திருநெல்வேலி விவசாயப் பாடசாலையில் இன்று முதல் 3 தினங்கள் பழமரச்செய்கை தொடர்பான வதிவிடப்பயிற்சி இடம்பெறவுள்ளது. இவ் வதிவிடப் பயிற்சியில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலா பிரிவைச் சேர்ந்த 60 பயனாளிகள் பங்கு பற்றவுள்ளனர். (உ-75)

## கனகசெந்தி கதாவிருதுக்கு நான்கு சிறுகதைகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

இரசிகமணி கனகசெந்திநாதனின் இலக்கியப் பணியை என்றும் நினைவு கூரும் முகமாக உருவாக்கப்பட்ட "கனகசெந்தி கதாவிருது'' குழு, ஈழத்து எழுத்தாளர்களால் படைக்கப்படும் ஈழத்துச் சிறுகதை இலக்கியத்திற்குப் பெருமை சேர்க்கும் சிறுகதைகளை இனங்கண்டு அவற்றினை மெச்சி இரசிகமணி க்னகசெந்திநாதனின் பெயரால் காலத்திற்குக் காலம் சிறு பணப்பரிசிலும் சான்றிதழும் வழங்குவதென முடிவு செய்துள்ளது.

அவ்வகையல், பின்வரும் சிறுகதைகள் "கனகசெந்தி கதாவிருது''க்குரியனவாகத் தெரிவாகியுள்ளன.

★ கருவேலங்காடு தாண்டி... (தினகரன்)
எம்.என். அமானுல்லா
★ வேட்டை(தினக்குரல்)
புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்
★ ஜலசமாதி (தினகரன்)
ஏ.எஸ். உபைத்துல்லா
★ வீடு (ஈழநாதம்)
சி. கதிர்காமநாதன்

கனகசெந்தி கதாவிருது பெறும் சிறுகதைகளைத் தொகுத்து நூலாக வெளியிடும் திட்டமும் உள்ளதால், இப்பணியை முன்னெடுப்பதற்கான ஆரம்ப நிதியாக ரூபா 6 ஆயிரத்து 500 யாழ்ப்பாணம் கலட்டியைச் சேர்ந்தவரும் அனந்ததேவன் என்ற பெயரில் நல்ல பலசிறுகதைகளை "சுதந்திரன்'' பத்திரிகையில் எழுதியவரும் இன்று கனடாவில் வசிப்பவருமான என். அனந்ததேவன் வழங்கியுள்ளார்.

கனகசெந்திநாதன் கதாவிருதுக்குழுவில் செங்கை ஆழியான், செம்பியன் செல்வன்,கலாநிதி எஸ். சிவலிங்கராஜா ஆகியோர் அடங்கியுள்ளனர். இவர்களுக்கான பரிசுகளும் சான்றிதழ்களும் எதிர்வரும் 6ஆம் திகதி நல்லை ஆதின மண்டபத்தில் நடைபெறவிருக்கும் ''இலங்கை இலக்கியப் பேரவைப் பரிசளிப்பு விழா''வில் வைத்து வழங்கப்படவுள்ளது. (உ)

## ஏ-9 பாதையை முழுநாளும் திறக்க தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 31ஆம் திகதி நடைபெறவுள்ள. வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தையொட்டி அடியார்களின் வசதி கருதி எதிர்வரும் 30,31ஆம் திகதிகளில் முகமாலை- ஓமந்தை ஆகிய இரு தடை முகாம்களையும் 24மணிநேரமும் திறந்து வைத்திருப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாலய உற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தலைமையில் நடைபெற்ற போது இதுதொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது. (உ)

---

## இனந்தெரியாதோர்..

படுத்தப்பட்டதாகவும் பொலிஸ் வட டாரங்களில் இருந்து தெரியவந்து ள்ளது.

இதே வேளை மட்டக் களப்பு மாவட்டத்தில் அண்மைக்காலங் களில இடம் பெற்றுவந்த கொலை களையடுத்து அங்கு பாதுகாப்புக்கென பெருமளவு படையினரும் பொலிசாரும் ஈடு படுத்தப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டிருந்தது தெரிந்ததே

(ம)

---

## அரசுக்கு...

ஏற்றுக் கொள்வதால் பாதகம் ஏதும் இல்லை எனறும், முஸ்லிம் காங்கிரசின் ஆதரவை பெறுவதால் நாடாளுமன்றில் 124 ஆசனங்களைப் பெறமுடியும் எனவும் சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

(த)

# அரசியல் கட்சிகளை வகைப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

அரசியல் கட்சிகள் அனைத்தையும் பதிவுபெற்ற அரசியல் கடசிகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியற் கட்சிகள் என. தரப்படுத்தப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் ஆதரவு இல்லாமல் சிலர் அரசியல் கட்சிகளை நடத்தி வருகின்றனர். சிலர் குறிப்பிட்ட ஒரு கட்சிக்கு மாத்திரமே ஆதரவு வழங்க வேண்டும் என்ற நோக்கில் தமது கட்சியை வழிநடத்துகின்றார்கள். இதனால் சகல அரசியல் கட்சிகளையும் இரு பிரிவாக தரப்படுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(உ-60,10)

---

## நோர்வே...

புலிகளின் தன்னாட்சி அதிகாரசபை குறித்துப் பேச்சுவார்த்தை நடாத்த தயாரென அறிவித்த ஜனாதிபதி இனப் பிரச்சினைக்கு இறுதித் தீர்வு காண பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற சாரப்பட தெரிவித்த கருத்தை புலிகளின் தலைவர் நிராகரித்திருந்தார்.

நாட்டின் சிறுபான்மை அரசாங்கம் ஒன்று ஆளும் நிலையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இறுதித் தீர்வு காண்பதென்பது முடியாத காரியம் எனவே தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட்ட பின்னர் இறுதித் தீர்வுக்கான பேச்சுக்களை ஆரம்பிக்கலாமென தலைவர் பிரபாகரன் குறிப்பிட்டிருந்தார்.

இந்தத் தகவலை நேற்று முன்தினம் நோர்வேத் தரப்பினர் ஜனாதிபதியிடம் அறிவித்தனர். இதன் அடிப்படையில் ஜனாதிபதி வழங்கியுள்ள பதிலை எடுத்துக் கொண்டு நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைசசர் இனறு கிளிநொச்சி செல்கிறார்.

இதற்கிடையில் நோர்வேப் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீஸன் நேற்று முஸலிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்தார்.

இதன் போது சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாக இறுதி முடிபு எடுக்கப்படாமையால் முஸ்லிம் மக்களின் தனித்தரப்புக் குறித்து இன்னமும் ஆராயப்படவில்லையென விடார் ஹெலகீஸன் தெரிவித்தார். (ந-121)

## ஜூலைக்...

1983ம் ஆண்டின் ஜூலைக் கலவரத்தின் போது இடம் பெறற மிக மோசமான 944 சம்பவங்களுக்கே இந்த நட்டஈடு வழங்கப்படவுள்ளது

இதற்கென 47 பில்லியன் ரூபா ஓதுக்கப்படவுள்ளது. அதே நேரம் கையூட்டு மற்றும் ஊழல்களுக்கு எதிரான ஆணைக் குழுவை இரண்டு திணைக்களத்துக்குகீழ் நடத்திச் செல்லவும்,நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

(ந60,10)

---

## கட்சித்...

கட்சித் தலைவர்களின் கூட்டம் நடத்தப்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை பாராளுமன்றம் கூடும் தினத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் இருவர் சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர். ரட்ணசிறி விக்கிரமநாயக்க,மேர்வின சில்வா ஆகியோரே இவ்வாறு சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளனர். இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட கிங்ஸ்லி இராசநாயகம், தனது இராஜினாமாக் கடிதத்தை ஒப்படைத்துள்ளதாக பிரியானி விஜயசேகர தெரிவித்துள்ளார். அது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (த)

## தென்னங்காணி...

உதிரிப்பாகங்களுக்கான தீர்வை ...வரும் முதலாம் திகதியில் இருந்து விலக்கப்படவுள்ளது என நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் வருவாய்ப்பகுதிப் பொறுப்பாளர் மருதன், விலைக் கட்டுப்பாட்டுப் பகுதயின் பொறுபபாளர் செழியன், பெருநதோட்டப் பகுதிப் பொறுபபாளர் நக்கீரன் வணிக நிறுவனங்களின் ஒன்றியப் பொறுப்பாளர் வெற்றியரசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-43,121)

## நாவுக்கரசர் குருபூசை

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி இந்து மன்றத்தினரால் நடத்தப்படும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை இன்று காலை 7.30 மணிக்கு கல்லூரியில் உள்ள சோமாஸ்கந்தர் ஆலயத்தில நடைபெறவுள்ளது.

ஆலயத்தில் நடைபெறும் விசேட பூசையைத் தொடர்ந்து மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனை, சிறப்புரைகள் என்பன இடம் பெறவுள்ளன. (உ)

---

## புலிகளின்...

முன்னணி அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பில் மேற்கொண்ட நடவடிக்கைகள் அவர்களைப் பலமடையச் செய்துள்ளது.

முன்னாள் பிரதமர் விடுதலைப் புலிகளுக்கு வழங்கிவந்த சலுகைகளை நாம் பகிரங்கமாக அப்போது எதிர்த்து வந்தோம். கடந்த தேர்தலில் நாம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளைப் படிப்படியாக நிறைவேற்றுவதற்கு, மீண்டுமொரு யுத்தம் ஏற்படாத வகையில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க வேண்டிய கடமை எமக்குண்டு.

இக் கடமையை சரிவர நிறைவேற்றுவதற்கு சமாதானப் பேச்சு வார்த்தைகளில் அரசு ஒருதரப்பாகவும், விடுதலைப் புலிகள் மறுதரப்பாகவும் கலந்து கொள்வதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

இந் நிலையில் சமாதானத்தின் இறுதிக் கட்டத்தை அடைவதற்காக சில விட்டுக் கொடுப்புக்களை நாம் செய்ய வேண்டியுள்ளதென்று ரில்வின் சில்வா மேலும் தெரிவித் துள்ளார். (ம)

---

## புலிகளின் மனித..

ஒப்படைத்திருக்கின்றனர்.

இதேபோல் புலிகள் அமைப்பில் இணைந்து செயற்பட முன்வரும் 18வயதிற்கு மேற்பட்டவர்களைக் கூட அவர்களின் குடும்ப நிலைமையையும் மன உணர்வுகளையும் மதித்து வீடுகளுக்கு அனுப்பி வைப்பது மிகவும் பாராட்டுக்குரியது.

மனித உரிமைகளை மதிக்கும் பண்பினை புலிகள் தமது கொள்கையாகவே கொண்டு செயற்படுவதும் மகிழ்ச்சியைத் தருவதுடன் அவர்களின் மனித உரிமைகளை மதிக்கும் தனமையையும் நிருபித்துக்காட்டுகின்றது. எனவே இத்தகைய ஒழுக்கம் நிறைந்த புலிகள் அமைப்பிலிருந்து சமூகவாழ்வுக்குத் திரும்பும் இளையவர்கள் நிச்சயமாக மனித விழுமியங்களை மதித்து நடக்கும் பண்புடையவர்களாக இருப்பார்களென்ற நம்பிக்கை எமக்குண்டு எனவும் அவர் தெரிவித்தார்.

யாழ்மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் இலங்கை மனிதவுரிமைகள் ஆணைககுழு அதிகாரிகளான பெறோஸ் மற்றும் மொறின் நிசாந்தினி ஆகியோர் முன்னிலையில் யாழ்மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் 9பேரையும் அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைத்தார்.

வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மேற்படி 9பேரும் சிறுவர்பராயத்தைக் கடந்து போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொள்ளக்கூடிய 18 வயதினை நிறைவு செய்தவர்களாகக் காணப்படுகின்ற போதும்,

இவர்களின் குடும்ப நிலைமைகளையம் தமிழீழத் தேசியத் தலைவரின் வருப்பத்திற்கும் புலிகள் அமைப்பின் கொள்கைகளுக்கும் அமைவாகவே பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்படுவதாக யாழ் மாவட்ட அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன் தெரிவித்தார்.

இதேவேளை அரசு- புலிகளுக்கான யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த 142பேர் இற்றைவரை யாழ் மாவட்ட அரசியல் துறையினரால் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(த-4)


# தகவல் தொழில்நுட்பப் பூங்கா

ITP JAFFNA SRI LANKA

தேசிய வீடமைப்பு அதிகாரசபைக் கட்டிடம்
கச்சேரி முன்பாக, கண்டிவீதி, யாழ்ப்பாணம்
Phone: 021-2223641 Director:021-2223643

2004ஆம் ஆண்டின் 2ஆம் பருவத்திற்கான புதிய பிரிவுகள் ஜூன் மாதம் 12ஆம் திகதி ஆரம்பிக்க உள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். பின்வரும் கற்கை நெறிகள் ஆரம்பிக்க உள்ளன. அதற்கான படிவங்களை தலைமையகத்திலும் மற்றும் கிளை நிலையங்களிலும் பெற்று பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.மே 25ஆம் திகதி முதல் கற்கைநெறிகளுக்கான கட்டணங்களைச் செலுத்தி நேர அட்டவணையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## Certificate Courses:-

* Computer Basic & Operating System
* MS-Word
* MS-Excel
* MS-Access
* PageMaker
* CorelDraw

Duration:30 Hours
Course fee:1000/-

* AutoCAD
* C/C++
* Java
* Visual Basic
* Internet & E-mail
* HTML & Java Script

Duration:30 Hours
Course fee:1800/-

## Diploma Courses

| | | |
|---|---|---|
| MS-Office | 5 Months | 2800/- |
| Hardware Technology | 6 Months | 3200/- |
| Desktop Publishing | 5 Months | 2400/- |
| Information Technology | 4 Months | 4750/- |

## Workshop Training

| | | |
|---|---|---|
| PC Maintenance | 20 Hours | 1000/- |
| DeskTop Publishig | 20 Hours | 1000/- |
| Internet & E-mail | 20 Hours | 1000/- |
| Multimedia | 20 Hours | 1000/- |

## தலைமையகத்தில் நடைபெறும் Diploma Courses

| | | |
|---|---|---|
| PC Application | 3 Months | 2750/- |
| Computer Programing | 6 Months | 5500/- |
| Internet Technology | 5 Months | 4500/- |
| Multimedia | 6 Months | 5500/- |

## Computer Studies for Children

| | | |
|---|---|---|
| Computer Awareness | 15 Hours | 250/- |

Registration Fee:250/- for all the courses & Workshop

கிளை நிறுவனங்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் கீழ்வரும் இடங்களில் பெற்று பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

வடமராட்சி : பிரதேச சபை, மாலிசந்தி, கரவெட்டி
வலிகாமம் : J/133 கிராம அலுவலர் பணிமனை, ஆனைக்கோட்டை (சந்திக்கருகில்)
தென்மராட்சி : பிரதேச செயலகம், சாவகச்சேரி.

தகவல்: பணிப்பாளர்



# இந்தியத் தேர்தல் களம்

## தமிழநாட்டில் காங்கிரஸ்-தி.மு.க கூட்டணி அமோக வெற்றி பெறும்

(சோனியா காந்தி ஜாதகம்)

| | | | |
|---|---|---|---|
| 9 | 10 | ரா | சந் |
| 8 | சோனியா (இராசி) 09.12.1946 திருவாதிரை (மிதுனராசி) | | ல / சனி |
| 7 | | | 2 |
| செ | பு, சூ கே | வி சு | 3 |

16.10.2005 வரை புத/ ராகு புத்தி

PROF: .சத்தியதாசன் Mech.E, Elect.E
ஆனைக்கோட்டை.

புத்தாண்டுப் பலன்கள் விற்பனையாகிறது. T.P:021-222 2753


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.05.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.